بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 9

இதழ் 14 & 15

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 ரமலான் 24 - 2 ஷவ்வால் ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஷஹாதத் 4-11 ★ 4- 11 ஏப்ரல் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا كُتِبَ عَلَيۡكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيۡنَ مِنۡ قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُوۡنَۙ ۝١٨٤

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டதைப் போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்.

(2: 184)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## கட்டுப்பட்டவர் மற்றும் கட்டுப்படாதவரை வேறுபடுத்துவதற்கு இந்த நோன்புகள் எடைபோடும் தராசு கருவியாக இருக்கின்றன

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், முஸ்லிம்களே ஷரீஅத்திற்கு அவமரியாதை செய்கின்றனர். ஆக, பாருங்கள்! எந்த நபர்களெல்லாம் இந்நாட்களில் நோன்பு நோற்றிருக்கின்றார்களோ அவர்கள் கொஞ்சம் கூட மெலிந்து விடவில்லை. எவர்கள் கவனக்குறைவுடன் இந்த மாதத்தைக் கழித்தார்களோ அவர்களின் உடல் பருமனும் கொஞ்சம் கூட கூடிவிடவில்லை. அவர்களின் நேரமும் கழிந்து விட்டது. அவர்களின் காலமும் கழிந்து விட்டது. குளிர்கால நோன்புகளாக இருந்தன. வெறும் உணவின் நேரத்தில் மட்டுமே ஒரு மாற்றம் இருந்தது. ஏழு எட்டு மணிக்கு உண்ணவில்லை ; மாறாக நான்கு, ஐந்து மணிக்கு உணவு உண்டனர். இயற்கையின் இந்த சலுகைக்கு மத்தியிலும் கூட ஏராளமானவர்கள் அல்லாஹ்வின் அடையாளங்களுக்கு மதிப்பளிக்கவில்லை. மேலும் இறைவனின் இந்த கண்ணியத்திற்குரிய மாதமான ரமலானை மிகவும் ஏளனத்துடன் பார்த்தனர். இந்த அளவிற்கு எளிமையான மாதங்களில் ரமலான் வருவதும் ஒருவகையான அளவுகோலாக இருந்தது. கட்டுப்பட்டவர் மற்றும் கட்டுப்படாதவரை வேறுபடுத்துவதற்கு இந்த நோன்புகள் எடைபோடும் தராசு கருவியாக இருக்கின்றன. இறைவன் புறமிருந்து எளிமை வழங்கப்பட்டிருந்தது. அரசாங்கம் எல்லா வகையான சுதந்திரமும் வழங்கியிருந்தது. பல தரப்பட்ட கனிகளும், உணவுகளும் கிடைத்திருந்தன. இன்றைய காலத்தில் எளிமை மற்றும் வசதி வாய்ப்புகளுக்குரிய எல்லா ஏற்பாடுகளும் இருக்கின்றன. அவ்வாறிருந்தபோதிலும், கவனம் செலுத்தப்படவில்லை. அதற்கான காரணம் என்ன? என்றால், உள்ளத்தில் இறைவன் மீது நம்பிக்கை இருக்கவில்லை. வேதனை என்னவென்றால், கடுகளவு கூட இறைவனுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. இறைவனுடன் எந்தத் தொடர்புமே இல்லை ; அவனுடன் ஒருபோதும் எந்தத் தொடர்பும் ஏற்படாது; மேலும் அவனது நீதிமன்றத்தின் முன்னால் சென்று நிற்கும் நிலை வராது என்பது போன்றே (அவர்களின்) எண்ணம் இருக்கின்றது. அந்தோ! நிராகரிப்பாளர் ஆராய வேண்டுமே! சிந்திக்க வேண்டுமே! கோடிக்கணக்கான சூரியன்களின் வெளிச்சத்தைக் காட்டிலும் அதிகமாக இறையிருப்பிற்கான சான்றுகள் இருக்கின்றன. ஆயினும், இறைவனின் எண்ணற்ற படைப்பினங்களைக் கண்ட பிறகும் கூட அவன் மீது ஈமான் கொள்ளாமல் இருப்பதும் அல்லது ஈமான் இருந்தாலும் ஈமான் இல்லாத நிலைக்கு ஒப்பானதாக இருப்பதும் எந்த அளவிற்கு துர்பாக்கியமான நிலை ஆகும்! நம் மீது வல்ல இறைவனின் ஏராளமான அருட்கள் இருக்கின்றன.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 431, காதியான்

## மனிதனுக்கு எந்தத் துன்பமுமே ஏற்படக் கூடாது; மேலும் அவன் எந்த பலவீனத்தையும் உணரக் கூடாது என்பதற்காக நோன்பு வைக்கப்படுவதில்லை. மாறாக பலவீனத்தை சகித்துக் கொள்வதற்கான பழக்கம் அவனுக்கு ஏற்பட வேண்டுமென்பதற்காக நோன்பு நோற்கப்படுகின்றன

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஷரீஅத்தானது நோன்பு தொடர்பாக மிகவும் வலியுறுத்தியுள்ளது. மேலும் எங்கு அது தொடர்பான வரம்புமீறிய கடுமை ஆகுமற்றதாக இருக்கின்றதோ அங்கு வரம்பு மீறிய மென்மையும் ஆகுமற்றதாகும். எனவே உயிர்போய் விடும் அளவிலான கடுமையும் காட்டக் கூடாது. அதேபோன்று ஷரீஅத்தின் கட்டளைகளை அவமதிக்கும் வகையிலான மற்றும் பொறுப்புகளை சாக்குபோக்குகளைக் கூறி தட்டிக் கழிக்கின்ற மென்மையையும் மேற்கொள்ளக் கூடாது. நான் பார்த்துள்ளேன்; பல நபர்கள் வெறும் பலவீனம் எனும் சாக்போக்கினால் நோன்புகள் நோற்பதில்லை. மேலும் சிலரோ, நோன்பு நோற்றால் பின்னர் வயிற்றுப் போக்கு ஏற்படும் என்று கூறுகின்றனர். உண்மையில் வயிற்றுப் போக்கு ஏற்பட்டு விடும் என்று கூறுவதெல்லாம் நோன்பை (கை) விட்டுவிடுவதற்கு ஒன்றும் போதுமான காரணம் கிடையாது. வயிற்றுப் போக்கு ஏற்பட்டு விடாதவரை நோன்பு நோற்பது மனிதனுக்கு கடமையாகும். வயிற்றுப் போக்கு ஏற்பட்டு விட்டால் பின்னர் அவர் நிச்சயம் நோன்பை முறித்துக் கொள்ளட்டும். இதேபோன்று, நோன்பு நோற்பதால் எங்களுக்கு பலவீனம் ஏற்பட்டு விடுகின்றது என்று சில மக்கள் கூறுகின்றனர். இதுவும் சான்று கிடையாது. எந்த பலவீனத்தின் காரணமாக மருத்துவர் நோன்பு நோற்பதை தடுப்பாரோ அந்தப் பலவீனத்தின்போது மட்டும் நோன்பை கைவிடுவது ஆகுமானதாகும். அவ்வாறில்லையென்றால், பொதுவாக சில மக்களோ எப்போதுமே பலவீனமானகவே இருக்கின்றனர்; அவர்கள் எப்போதுமே நோன்பு நோற்கக் கூடாதா என்ன?

(தஃப்ஸீரே கபீர்,தொகுதி 2, பக்கம் 386, காதியான் பதிப்பு -2010-ம் ஆண்டு)

## நபிமொழி

### ரமலானின் இரவுகளில் எழுந்து தொழுவது

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நபர் ஈமானின் தேட்டங்களை பூர்த்தி செய்தவாறும், தனது நஃப்ஸை கணக்கிட்டவாறும் ரமலானின் இரவுகளில் எழுந்து தொழுகின்றாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுஸ் ஸவ்ம், ஃபஸ்ல் மன் காம ரமலான்,2008-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

### ரமலானின் கடைசி பத்து நாட்களில் இஃதிகாஃப் அமர்வது

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரமலானின் கடைசி பத்து நாட்களில் இஃதிகாஃபில் அமர்ந்து வந்தார்கள்; மேலும் இந்த நடைமுறையே அன்னாரின் மரணம் வரை இருந்தது .அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய துணைவியார்களும் அந்த நாட்களில் இஃதிகாஃபில் அமர்ந்து வந்தார்கள் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் இஃதிகாஃப் ஃபீல் அஷ்ருல் அவாகிர், ஃபஸ்ல் மன் காம ரமலான்,2008-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

### பொய்யிலிருந்து தவிர்ந்து இருந்தல்

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நபர் பொய் பேசுவதிலிருந்தும், பொய்யின் மீது அமல் செய்வதிலிருந்தும் விலகவில்லையோ அத்தகைய நபர் பசியுடனும், தாகத்துடனும் இருப்பதற்கு அல்லாஹ்விற்கு எந்த அவசியமும் இல்லை. அதாவது அவருடைய நோன்பு பயனற்றதாகும்.(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுஸ் ஸவ்ம், 2008-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹது போருக்குப் பிறகு ஸஹாபா பெருமக்களுடைய நல்லடக்கம் மற்றும் உஹது போரில் பெண் ஸஹாபியாக்களின் தீரம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த நேசம் மற்றும் நன்றியுணர்வு போன்றவற்றின் ஈமானை வலுவூட்டும் நற்குறிப்புகள்**

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நலமுடன் இருக்கின்றார்கள். அன்னார் (ஸல்) நலமுடன் இருக்கும்போது பின்னர் எல்லாத் துன்பங்களும் எளிதானதாகும் என்று ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) அவர்கள் கூறினார்கள்

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் பிரிவினைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அந்த வேதனை இறுதி வரை இருந்தது. எப்போதும் அதனை அன்னார் (ஸல்) குறிப்பிட்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மதிநுட்பம் நிறைந்த வழிமுறையில் மரணித்த முஸ்லிம்களுக்காக முஸ்லிம் பெண்கள் ஒப்பாரி வைப்பதை தடை செய்து விட்டார்கள். ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்தப் பெண்மணியைக் குறித்தும் அவர் உஹது போரில் கலந்து கொண்டார் என்று நிரூபணமாகவில்லை.

நான் சொர்க்கத்தில் தங்களுடன் இருக்க வேண்டும் என்று தாங்கள் எனக்காக துஆ செய்யுங்கள் என்று ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் வேண்டினார்கள். அல்லாஹ்வே! இவர்களை சொர்க்கத்தில் என்னுடைய தோழராகவும், நண்பராகவும் ஆக்குவாயாக! என்று அன்னார் (ஸல்) துஆ செய்தவாறு கூறினார்கள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 மார்ச் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **அமான்** மாதம் **1ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் உஹது போரின் நிலைமைகள் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காயமுற்றவர்களையும், ஷஹீதுகளையும் ஒன்று கூட்டினார்கள். காயமுற்றவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும் ஷஹீதுகளை நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது, அநீதியாளர்களான மக்கத்து நிராகரிப்பாளர்கள் சில முஸ்லிம் ஷஹீதுகளின் காதையும், மூக்கையும் துண்டித்துள்ளனர் என்பது அன்னாருக்கு தெரிய வந்தது. ஆக, மூக்கு துண்டிக்கப்பட்டிருந்த அந்த மக்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஹம்ஸா (ரலி) அவர்களும் இருந்தார்கள்.அந்தக் காட்சியைக் கண்டு விட்டு அன்னாருக்கு மிகுந்த வேதனை ஏற்பட்டது. அப்போது, இவ்வாறான எந்தப் பழிவாங்குதலை நாம் ஆகுமற்றதாக கருதியிருந்தோமோ அதனை தற்போது நிராகரிப்பாளர்கள் சுயமே தங்களது செயல்களால் நமக்கு ஆகுமானதாக ஆக்கிவிட்டனர் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஆனால், நிராகரிப்பாளர்கள் என்ன செய்கின்றார்களோ அவர்கள் செய்து கொள்ளட்டும்; நீங்கள் கருணை மற்றும் நீதியை எப்போதும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று இறைவன் புறமிருந்து அந்நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ வந்தது.(தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன்,அன்வாருல் உலூம், தொகுதி 20,பக்கம் 254- 255) இது இஸ்லாமிள போதனையாகும்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் நல்லடக்கம் மற்றும் கஃபனிடுதல் குறித்து வருகின்றது.ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு ஒரே ஆடையில் கஃபனிடப்பட்டது. சிலவற்றை சுருக்கமாக நான் முன்னர் எடுத்துரைத்து விட்டேன். இன்னும் கூறப்போனால் விரிவாகவே எடுத்துரைத்து இருக்கின்றேன். சில விஷயங்கள் இடம் பெற்றிருக்கவில்லை. அன்னாருடைய தலை மூடப்பட்டபோது அன்னாருடைய கால்களிலிருந்து துணி விலகி விடும்.போர்வை கால்களின் பக்கம் இழுக்கப்படும்போது அன்னாரின் முகத்திலிருந்து துணி விலகி விடும். அப்போது ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அன்னாரின் முகத்தை மூடிவிடுங்கள்; மேலும் கால்களில் ஹர்மல் அல்லது அஸ்கர் போன்ற புற்களை வைத்து விடுங்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் மற்றும் அன்னாரின் மருமகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹஷ் (ரலி) ஆகியோரை ஒரே கப்ரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லாரையும் விட முதலில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையைத் தொழ வைத்தார்கள். இது அத்தபகாத்துல் குபராவின் சான்றாகும். (அத்தபக்காத்துல் குபரா, தொகுதி 3, பக்கம் 6-7)

இந்த ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை தொடர்பான கருத்துகளை முந்தைய குத்பாக்களில் நான் எடுத்துரைத்து விட்டேன். இறந்தவர்களுக்காகவும் மரணித்தவர்களுக்காகவும் வைக்கப்படும் ஒப்பாரியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு மதிநுட்பம் நிறைந்த வடிவில் தடை செய்தார்கள் என்றால், ஓர் அறிவிப்பில் வருகின்றது. இது அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களின் அறிவிப்பாகும்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரிலிருந்து திரும்பி வந்தபோது, அன்ஸார் பெண்கள் தமது குடும்பத்தினருக்காக அழுது கொண்டும் ஒப்பாரி வைத்துக் கொண்டும் இருப்பதை அன்னார் (ஸல்) செவியுற்றார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: என்ன விஷயம்? ஹம்ஸாவிற்காக அழுபவர் யாருமில்லையா? இது அன்ஸார் பெண்மணிகளுக்கு தெரிய வந்தபோது, பின்னர் அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்காக ஒப்பார் வைக்க ஒன்று கூடிவிட்டனர். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண் அசந்து விட்டார்கள். எனது கருத்தின்படி மஸ்ஜிதிலேயே சிறிது தூரத்தில் இருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) கண்விழித்தபோது, அந்தப் பெண்கள் அதேபோன்று அழுது கொண்டிருந்தார்கள். இன்று இந்த மக்கள் ஹம்ஸாவின் பெயரைக் குறிப்பிட்டு அழுது கொண்டே இருப்பார்களா? நிறுத்த மாட்டார்களா?. திரும்பிச் செல்லும்படி அவர்களிடம் கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உங்களது வீடுகளுக்கு திரும்பிச் செல்லுங்கள்; மேலும் இன்றைக்குப் பிறகு எந்தவொரு மரணித்தவருக்காகவும் அழுது ஒப்பாரி வைக்காதீர்கள் என்று அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(முஸ்னத் அஹ்மத், தொகுதி 2, பக்கம் 418 -419,ஹதீஸ் 5563. ஆலமுல் குதுப். பெய்ரூத் பதிப்பு, 1998)

ஆக, இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்தவர்களுக்காக ஒப்பாரி வைப்பதை ஆகுமற்றதாக ஆக்கிவிட்டார்கள். எல்லா வகையான ஒப்பாரியையும் நிறுத்தி விட்டார்கள். இவ்வாறு பெரும் மதிநுட்பத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரி பெண்களின் உணர்வுகளை கருத்தில் கொண்டார்கள். அவர்களுடைய கணவர்மார்கள் மற்றும் சகோதரர்களின் பிரிவையொட்டி வைக்கப்படும் ஒப்பாரியை தடுப்பதற்கு பகரமாக ஹஸ்ரத் ஹம்ஸா(ரலி) அவர்களை குறிப்பிட்டார்கள். அன்னாருக்காக அழுபவர் யாருமில்லையா? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஷஹாதத்தினாலும், பின்னர் அன்னாரின் பூத உடல் அவமரியாதை செய்யப்பட்டிருந்ததைக் கண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடும் துக்கம் ஏற்பட்டது. ஆயினும், தற்போது அன்ஸார் பெண்கள்

ஒப்பாரியை நிறுத்தாமல் இருக்கின்றனர்; மேலும் இது ஒரு சடங்காக இருக்கின்றது என்பதையும் அன்னார் (ஸல்) கண்டபோது, பின்னர் அந்த சடங்கை நிறுத்துவதற்காக தமது முன்மாதிரியை எடுத்து வைத்தார்கள். மேலும் பொறுமை செய்யும்படி அவர்களுக்கு தாக்கம் நிறைந்த அறிவுரையை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் பிரிவினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை பொறுத்த வரையில் இறுதி வரை அன்னாருக்கு அந்த வேதனை இருந்தது. எப்போதும் அதனை குறிப்பிட்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஷஹாதத்தையொட்டி தமது இரங்கலில் இவ்வாறு கூறினார்கள்: எனது கண்கள் கண்ணீர் வடிக்கின்றன. மேலும் ஹம்ஸாவின் மரணத்தால் அவற்றிற்கு அழுவதற்கு முழுமையான உரிமை இருக்கின்றது. ஆனால், இறைவனின் சிங்கத்தின் மரணத்தினால் அழுது புலம்புவதாலும், கதறி கூப்பாடுபோடுவதாலும் என்ன கிடைக்கப் போகின்றது? ஹம்ஸாவாகிய அவர் இறைவனின் சிங்கம் ஆவார். அவர் ஷஹீதான காலைப் பொழுதில், இந்த ஆண்மகன்தான் ஷஹீதாகியிருக்கின்றார் என்று உலகம் கூறியது. (அஸதுல் காபஃ, தொகுதி 2, பக்கம் 69, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு, 2003)

ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களின் நல்லடக்கம் குறித்து வருகின்றது: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களின் பூத உடலுக்கு அருகில் சென்றடைந்தபோது, அன்னாரின் உடல் முகங்குப்புற கிடந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு அருகில் நின்று கொண்டு இந்த வசனத்தை திலாவத் செய்தார்கள்:

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ

فَمِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ

وَمَا بَدَّلُوْا تَبْدِيْلًا

(அல்அஹ்ஸாப்: 24)

நம்பிக்கை கொண்டவர்களுள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திய மனிதர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் (தாங்கள் போர் செய்து மரணமடைய வேண்டும் என்ற) தங்கள் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர். அவர்களுள் மற்றுஞ் சிலர் (இன்னும் அதனை) எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إِنَّ رَسُوْلَ اللّٰهِ يَشْهَدُ أَنَّكُمُ الشُّهَدَاءُ

عِنْدَ اللّٰهِ يَوْمَ الْقِيَامَةِ

நீங்கள் மறுமை நாளன்றும் அல்லாஹ்விடத்தில் ஷஹீதுகளாக இருப்பீர்கள் என்று இறைவனின் தூதர் சாட்சி பகர்கின்றார். பின்னர் அன்னார் (ஸல்) ஸஹாபிகளை நோக்கியவாறு கூறினார்கள்: இவர்களை தரிசித்துக் கொள்ளுங்கள்; மேலும் இவர்களுக்கு ஸலாம் கூறுங்கள். எவனுடைய கரத்தில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! கியாமத் நாள் வரை எவர் அவர்களுக்கு ஸலாம் கூறினாலும் அவரின் ஸலாத்திற்கு அவர்கள் பதில் கூறுவார்கள். ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களின் சகோதரர் ஹஸ்ரத் அபூ ரூம் பின் உமைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸுவைத் பின் ஸஃது (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆஃ (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களை கபரில் இறக்கினார்கள். (அத்தபக்காத்துல் குபரா, பாகம் 3,பக்கம் 89 - 90, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு 1990-ம் ஆண்டு)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் எழுதுகின்றார்கள்: உஹது போர் ஷஹீதுகளில் ஒருவராக முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். இவர்கள் மதீனாவிற்கு முபல்லிஃக் ஆக வந்தவர்களில் முதன்மையான முஹாஜிராக இருந்தார்கள். அறியாமைக் காலத்தில் முஸ்அப் (ரலி) மக்கத்து இளைஞர்களில் அழகிய ஆடை அணியக் கூடியவராகவும், செல்வந்தராகவும் கருதப்பட்டு வந்தார்கள்.

அதாவது மிகவும் நல்ல சிறந்த ஆடைகளை அணியக்கூடியவராகவும், மிகவும் வசதி படைத்தவராகவும் இருந்தார்கள். மேலும் மிகவும் செல்வந்தராக இருந்தார்கள். இஸ்லாத்தைத் தழுவியதற்கு பிறகு அன்னாரின் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. எனவே அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை அன்னாரின் உடலின் மீதிருந்த ஓர் உடையைக் கண்டார்கள். அதில் பல ஒட்டுகள் இருந்தன. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவருடைய முந்தைய காலம் நினைவிற்கு வந்து விட்டது. எனவே அன்னாரின் கண்கள் கலங்கிவிட்டன. கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

உஹது போரில் முஸ்அப் ஷஹீதானபோது அன்னாருடைய உடலை மறைக்கின்ற அளவிற்கு தேவையான துணி கூட அன்னாரிடம் இருக்கவில்லை. கால்களை மறைக்கும்போது தலைப் பகுதி வெளிப்பட்டு விடும். தலையை மறைக்கின்றபோது கால்கள் திறந்து விடும். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப தலையை துணியால் மூடிவிட்டு, கால்கள் புற்களால் மறைக்கப்பட்டன.(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத்துல் காத்தமுன்னபிய்யீன் பக்கம் 501)

உஹது போர் நாளன்று போருக்குப் பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு துஆவும் செய்தார்கள். இதனைக் குறித்து குறிப்பு வருகின்றது: அதாவது ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபி ஸூரகீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்களின் நல்லடக்கத்தை முடித்து விட்டு வெளியேறிய பிறகு தமது குதிரைகளின் மீது சவாரி செய்தார்கள். மேலும் முஸ்லிம்கள் அன்னாரைச் சுற்றி இருந்தார்கள். பெரும்பாலானவர்கள் காயமுற்றிருந்தனர். பனூ ஸலமா மற்றும் பனூ அப்தில் அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் காயமுற்றவர்களாக இருந்தனர். மேலும் அன்னாருடன் 14 பெண்மணிகளும் இருந்தனர். உஹது மலைக்கு கீழே சென்றடைந்தபோது அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் எனது இறைவனாகிய அல்லாஹ்வின் புகழை எடுத்துரைப்பதற்காக நீங்கள் அனைவரும் அணி வகுத்து நில்லுங்கள்; எனவே அன்னாருக்குப் பின்னால் ஆண்கள் அணி வகுத்து நின்று விட்டனர். மேலும் அவர்களுக்குப் பின்னால் பெண்கள் (அணி வகுத்து நின்றனர்). அப்போது, அன்னார் (ஸல்) இந்த சொற்களைக் கூறினார்கள்:

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ كُلُّهٗ، اَللّٰهُمَّ لَا قَابِضَ لِمَا بَسَطْتَ، وَلَا بَاسِطَ لِمَا قَبَضْتَ، وَلَا هَادِيَ لِمَنْ أَضْلَلْتَ، وَلَا مُضِلَّ لِمَنْ هَدَيْتَ، وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا مَانِعَ لِمَا أَعْطَيْتَ، وَلَا مُقَرِّبَ لِمَا بَاعَدْتَ وَلَا مُبْعِدَ لِمَا قَرَّبْتَ، اَللّٰهُمَّ ابْسُطْ عَلَيْنَا مِنْ بَرَكَاتِكَ وَرَحْمَتِكَ وَفَضْلِكَ وَرِزْقِكَ. اَللّٰهُمَّ إِنَّا نَسْأَلُكَ النَّعِيْمَ الْمُقِيْمَ الَّذِيْ لَا يَحُوْلُ وَلَا يَزُوْلُ، اَللّٰهُمَّ إِنَّا نَسْأَلُكَ النَّعِيْمَ يَوْمَ الْعَيْلَةِ. اَللّٰهُمَّ إِنَّا نَسْأَلُكَ الْأَمْنَ يَوْمَ الْخَوْفِ. [وَالْغِنٰى يَوْمَ الْفَاقَةِ] اَللّٰهُمَّ إِنِّيْ عَائِذٌ بِكَ مِنْ شَرِّ مَا أَعْطَيْتَنَا وَمِنْ شَرِّ مَا مَنَعْتَنَا. اَللّٰهُمَّ حَبِّبْ إِلَيْنَا الْإِيْمَانَ وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا، وَكَرِّهْ إِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ، اَللّٰهُمَّ تَوَفَّنَا مُسْلِمِيْنَ وَأَحْيِنَا مُسْلِمِيْنَ، وَأَلْحِقْنَا بِالصَّالِحِيْنَ غَيْرَ خَزَايَا وَلَا مَفْتُوْنِيْنَ، اَللّٰهُمَّ قَاتِلِ الْكَفَرَةَ الَّذِيْنَ يُكَذِّبُوْنَ رُسُلَكَ وَيَصُدُّوْنَ عَنْ سَبِيْلِكَ، وَاجْعَلْ عَلَيْهِمْ رِجْزَكَ وَعَذَابَكَ، اَللّٰهُمَّ قَاتِلِ الْكَفَرَةَ الَّذِيْنَ أُوْتُوا الْكِتَابَ، إِلٰهَ الْحَقِّ. [آمين].

பொருள்:அல்லாஹ்வே! எல்லாப் புகழும் உனக்கே உரியன. அல்லாஹ்வே! நீ எந்தப் பொருளுக்கு அபிவிருத்தி வழங்கி விடுவாயோ அதனைத் தடுப்பவர் எவருமில்லை. மேலும் நீ! எதனை தடுத்து நிறுத்தி விடுவாயோ அதில் எவராலும் அபிவிருத்தி வழங்க முடியாது. நீ! வழிதவறச் செய்யக்கூடியவருக்கு எவராலும் நேர்வழி வழங்க முடியாது. மேலும் நீ! எவருக்கு நேர்வழி வழங்குவாயோ அவரை எவராலும் வழிதவறச் செய்ய முடியாது.நீ! எந்தப் பொருளை தடுத்து நிறுத்தி விட்டாயோ அதனை வழங்குபவர் எவருமில்லை. நீ! அருளுவதை தடுப்பவர் எவருமில்லை. நீ! எதனை விலக்கி விடுவாயோ அதனை நெருங்கச் செய்பவர் எவருமில்லை. நீ! எதனை நெருங்கச் செய்வாயோ அதனை விலக்குபவர் எவருமில்லை.

அல்லாஹ்வே! நீ உனது பரக்கத்துகளிலும், கருணையிலும், மேலும் உனது அருளிலும், செல்வத்திலும் அபிவிருத்தி வழங்குவாயாக! அல்லாஹ்வே! நாங்கள் ஏழ்மையின் நாட்களில் உன்னிடம் அருட்கொடைகளை வேண்டுகின்றோம். அல்லாஹ்வே! நாங்கள் அச்சத்தின் நாட்களில் உன்னிடம் அமைதியை வேண்டுகின்றோம். மேலும் பசியின் நாட்களில் தன்னிறைவை வேண்டுகின்றோம். அல்லாஹ்வே! நீ எங்களுக்கு வழங்கியுள்ள பொருட்களின் தீமைகளிலிருந்து நான் உன்னிடம் பாதுகாப்பு வேண்டுகின்றேன். மேலும் எந்தத் தீங்கிலிருந்து நீ! எங்களை தடுத்துள்ளாயோ அதிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்பு வேண்டுகின்றேன்.அல்லாஹ்வே! ஈமானை நீ எங்களுக்கு நேசத்திற்குரியதாக ஆக்கிவிடுவாயாக! மேலும் எங்களது உள்ளங்களை அதனைக் கொண்டு அழகுப்படுத்தி விடுவாயாக!எங்களுக்கு நிராகரிப்பையும், தீமையையும், கட்டுப்படாமையையும் வெறுப்பிற்குரியதாக ஆக்குவாயாக! மேலும் எங்களை நேரான வழியில் நடப்பவர்களாக ஆக்கி வைப்பாயாக! அல்லாஹ்வே! எங்களுக்கு முஸ்லிமான நிலையில் மரணத்தை தந்தருள்வாயாக! மேலும் எங்களை முஸ்லிமான நிலையில் உயிருடன் வைப்பாயாக! மேலும் நாங்கள் இழிவடையாத வண்ணமும், எந்த குழுப்பத்திலும் நாங்கள் வீழ்ந்து விடாத வண்ணமும் நீ எங்களை நல்லடியார்களுடன் சேர்த்து வைப்பாயாக! அல்லாஹ்வே! உனது தூதர்களை பொய்ப்பிக்கும் காஃபிர்களையும், உனது வழியை தடுக்கின்ற காஃபிர்களையும் அழித்து விடுவாயாக! மேலும் அவர்கள் மீது உனது தண்டனையை இறக்குவாயாக! அல்லாஹ்வே! உண்மையான வணக்கத்திற்குரியவனே! வேதத்தையுடைய காஃபிர்களை அழித்து விடுவாயாக! ஆமீன்! (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத் தொகுதி 4, பக்கம் 227,தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு 1993-ம் ஆண்டு)

அந்நேரத்தில் அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி செய்த துஆ இதுவாக இருந்தது.

உஹது போரில் பெண் ஸஹாபியாக்களின் பங்கை நான் முன்னரும் எடுத்துரைத்து இருந்தேன். மேலும் எடுத்துரைக்கின்றேன்.

உஹது போரில் எங்கு ஆண்கள் உயிர்த் தியாகங்களுக்கான வரலாற்றை படைத்தார்களோ அங்கு பெண்களும் இஸ்லாமியப் படைக்கு தோளோடு தோள் நின்று பெரும் தொண்டாற்றினார்கள்.

ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்களைக் குறித்து அன்னார் (ரலி) உஹது போரில் கலந்து கொண்டிருந்தார்கள் என்று அறிவிப்பில் குறிப்பு வருகின்றது. ஆக, ஹஸ்ரத் முத்தலிப் பின் அப்தில்லாஹ் பின் ஹன்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்

தூதர் (ஸல்) அவர்கள் உஹுதை நோக்கி புறப்பட்ட நாளன்று,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழியில் மதீனாவுக்கு அருகில் ஷேகைன் என்ற ஓரிடத்தில் இரவில் தங்கினார்கள். அங்கு ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் பொறித்த இறைச்சியை எடுத்து வந்தார்கள். அதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்டார்கள். அதேபோன்று அன்னார் நீஸ் என்ற பானத்தையும் கொண்டு வந்தார்கள். அன்னார் (ஸல்) அந்த நீஸ் பானத்தை அருந்தினார்கள். (அத்தபக்காத்துல் குப்ரா, தொகுதி 3, பக்கம் 67, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு 1990-ம் ஆண்டு)

அறிவிப்பாளர் கூறுகின்றார்: (நீஸ் என்ற) இந்தப் பொருள் ஹரீராவைப் போன்ற ஒரு பொருளாகும்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹுது நாளில் நான் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களையும் எனது தாயார் உம்மு ஸுலைம் (ரலி) அவர்களையும் கண்டேன். அவர்கள் தோல் பையில் நீரை நிறைத்து, நிறைத்து எடுத்துக் கொண்டு வந்தார்கள். மேலும் தாகித்தவர்களுக்கு தண்ணீர் அருந்தக் கொடுத்தார்கள்.

புகாரியின் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹுது போருக்கான நாள் வந்தபோது, மக்கள் தோல்வியுற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விலகிவிட்டனர். அதாவது பின்தங்கி விட்டனர். பின்னர் அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் ஆயிஷா பின்த் அபீ பக்ர் (ரலி) அவர்களை கண்டேன். மேலும் ஹஸ்ரத் உம்மு ஸுலைம் (ரலி) அவர்களையும் கண்டேன். மேலும் அவர்கள் தமது ஆடைகளை வலுவாக கட்டியிருந்தார்கள். நான் அவர்கள் இருவரின் கால்களிலிருந்த கொலுசைக் கண்டேன். அவர்கள் இருவரும் வேகமாக தோல் பைகளில் தண்ணீர் நிறைத்து எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள். இது மட்டுமின்றி வேறொருவர் கூறினார்: மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு இருக்கின்றது: அவர்கள் இருவரும் தங்களது இடுப்புகளில் தோல் பைகளில் தண்ணீரை சுமந்து கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் இருவரும் மக்களின் வாயில் அவற்றை ஊற்றிக் கொண்டிருந்தார்கள். அதாவது தண்ணீர் அருந்தச் செய்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் இருவரும் திரும்பிச் செல்வார்கள். மேலும் மீண்டும் அவற்றை தண்ணீரால் நிறைத்து எடுத்து வருவார்கள். பின்னர் அவர்கள் இருவரும் வந்து அவற்றை மக்களின் வாயில் ஊற்றுவார்கள்.(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஜிஹாது, ஹதீஸ் எண்: 2880)

ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்களின் தாயார் உம்மு ஸுலைத் (ரலி) அவர்களும் தொலை தூரத்தில் இருந்து தண்ணீருக்கான தோல் பையில் தண்ணீரை நிறைத்து நிறைத்து எடுத்து வந்தார்கள். மேலும் மற்றொரு பக்கம் காயமடைந்தவர்களுக்கும், தாகித்தவர்களுக்கும் தண்ணீர் அருந்தக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் உம்மு அதிய்யா (ரலி) அவர்களும் இதே தொண்டை ஆற்றியுள்ளார்கள். ஆயினும், வேறு சில முஸ்லிம் பெண்மணிகள் முறையாக ஈட்டி மற்றும் வாளை கையில் ஏந்திக் கொண்டு எதிரிகளுடன் நேருக்கு நேர் போரும் புரிந்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இப்னு கமீய்யா தாக்குதல் தொடுப்பதை அவர்கள் கண்டபோது, அவர்கள் எந்த அச்சத்திற்கும், அபாயத்திற்கும் அஞ்சாமல் அரேபியாவின் அந்த குதிரை வீரருக்கு முன்னால் எதிர்த்து போரிட்டார்கள். மேலும் அவன் மீது பலமுறை தாக்குதல் நடத்தி அவனை பின்வாங்கும் நிர்பந்தத்திற்கு ஆளாக்கி விட்டார்கள் என்று நான் முந்தைய குத்பாவில் எடுத்துரைத்திருந்தேன்.

( முஹம்மத் அஸ்ஹர் ஃபரீத் அவர்களின் ஹஸ்வாத் வ ஸராயா என்ற நூல், பக்கம் 198, ஃபரீத் பப்ளிஷர்ஸ் ஸாஹீவால், 2018)

இப்னு அபீ ஷைபா மற்றும் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ஆகியோர் அப்துல்லாஹ் பின் மகூத் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: உஹுது நாளன்று பெண்கள் முஸ்லிம்களுக்கு பின்னால் இணை வைப்பாளர்களில் காயமுற்ற மக்களை மரணக் குழியில் இறக்கிக் கொண்டிருந்தார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 203, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு 1993-ம் ஆண்டு)

சில பெண் ஸஹாபியாக்கள் உஹுது போர் மைதானத்திற்கு போருக்குப் பிறகு வந்தனர். ஆக, அறிவிக்கப்படுகின்றது. இணை வைப்பாளர்கள் சென்று விட்டபோது, பெண்கள் ஸஹாபா பெருமக்களிடத்தில் வந்தனர். அவர்களில் ஸாஹிப்ஸாதி ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களும் இருந்தார்கள். அன்னார் இறைத் தூதர் (ஸல்) அவர்களை சந்தித்தபோது அன்னாரைக் கட்டி அணைத்துக் கொண்டார்கள் மேலும் அன்னாருடைய காயங்களை கழுவத் தொடங்கினார்கள். மேலும், அலீ (ரலி) அவர்களின் கேடயத்தின் மூலம் தண்ணீர் ஊற்றினார்கள். ஆனால், இரத்தம் அதிகம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் கற்பாறைகளின் சில பகுதியை எரித்து சாம்பலாக்கி விட்டார்கள். மேலும் அதனைக் கொண்டு காயங்களுக்கு ஒத்தடம் கொடுத்தார்கள். எதுவரை என்றால், அவை காயங்களுடன் கலந்து விட்டன. மேலும் இரத்தம் நின்று விட்டது. (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 209 -210,தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உஹுது போரைக் குறித்து செய்தி சேகரிப்பதற்காக மதீனத்து பெண்களுடன் வீட்டிலிருந்து வெளியே சென்றார்கள். அந்நேரத்தில் பர்தாவிற்கான கட்டளை இறங்கியிருக்கவில்லை. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹர்ரா என்ற இடத்தை அடைந்தபோது அன்னார் (ரலி) ஹிந்த பின்த் அம்ர் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களின் சகோதரரியாக இருந்தார்கள். ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) தமது ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த ஒட்டகத்தில் அன்னாருடைய கணவர் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி), மகன் ஹஸ்ரத் கல்லாத் பின் அம்ர் (ரலி), சகோதரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) ஆகியோரின் உடல்கள் இருந்தன. இந்த மூவரின் உடல்களும் ஒட்டகத்தின் மீது இருந்தன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் போர் மைதானத்தின் செய்தியை சேகரிப்பதற்காக முயற்சி செய்தார்கள். அப்போது, நீங்கள் எந்த நிலையில் மக்களை பின்னால் விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்பது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அன்னாரிடம் கேட்டார்கள். அப்போது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நலமாக இருக்கின்றார்கள்; மேலும் அன்னார் (ஸல்) நலமுடன் இருக்கும்போது பின்னர் எல்லா துன்பமும் எளிதாகும் என்று ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அப்போது அன்னார் (ரலி) தமது மூன்று நெருங்கிய உறவினர்களுடைய அதாவது தமது கணவர், மகன் மற்றும் சகோரரரின் உடல்களை சுமந்து கொண்டிருந்தார்கள். ஆனால், நலம் விசாரிக்கப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமாக இருக்கின்றார்கள்; எனவே அனைத்தும் நலமாக உள்ளது தற்போது இவர்களை நானோ நல்லடக்கம் செய்து விடுவேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமுடன் இருக்கின்றார்கள் என்றால் பின்னர் எந்தப் பிரச்சனையும் இல்லை. (கிதாபுல் மகாஸீ, தொகுதி 1, பக்கம் 232 -233, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மக்கள் என்ன செய்கின்றார்கள்? என்பதை அறிவதற்காக நான் உஹுது போர் நாளன்று புறப்பட்டுச் சென்றேன். என்னிடத்தில் தண்ணீரால் நிரப்பப்பட்ட தோல்பை இருந்தது. அதனை நான் காயமுற்றவர்களுக்கு தண்ணீர் அருந்தக் கொடுப்பதற்காக என்னுடன் எடுத்துச் சென்றிருந்தேன். எந்த அளவுக்கு என்றால், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்தேன். அந்தவேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிக்கு மத்தியில் இருந்தார்கள். மேலும் முஸ்லிம்கள் வலுவான நிலையில் இருந்தனர்.பின்னர் திடீரென முஸ்லிம்களுக்கு தோல்வி ஏற்பட்டு விட்டது. நான் விரைவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றடைந்து விட்டேன். மேலும் எழுந்து நின்று போரிடத் துவங்கினேன். நான் வாளின் மூலமாக எதிரிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் வருவதிலிருந்து தடுத்துக் கொண்டிருந்தேன். அத்துடன் நான் வில்லில் இருந்து அம்புகளை எய்து கொண்டிருந்தேன். எந்த அளவுக்கு என்றால் அந்நிலையிலேயே நான் காயமடைந்து விட்டேன்.( ஸீரத்துல் ஹலபிய்யா, தொகுதி 2, பக்கம் 313, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்: அதாவது எந்தப் பெண்மணி உஹுது போரில் போர் புரிந்தாரோ மேலும் தோல்வி நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாப்பதற்காக வீரத்தின் உச்சத்தை தொட்டவாறு அம்பு எய்தாரோ அவர் ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்களாக இருந்தார்கள். உம்மே அம்மாரா நஸய்பா மாஸினீயா ஆவார்கள்.(முஹம்மத் அஹ்மத் பாஷ்மைல் அவர்களின் உஹுது போர் நூல், பக்கம் 171, நஃபீஸ் அகாடமி கராச்சி)

நுஸைய்பஃ மாஸினிய்யா அதாவது ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்தப் பெண்மணியைக் குறித்தும், அவர் உஹுது நாளில் போரில் பங்கு பெற்றார் என்று நிரூபணமாகிவில்லை.

ஆயினும், வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளனர். அதாவது சில முஸ்லிம் பெண்கள் இணை வைப்பாளர்கள் பின்வாங்கிச் சென்ற பிறகு மதீனாவிலிருந்து போர் மைதானத்தின் பக்கம் சென்றார்கள். மேலும் அவர்கள் காயமுற்றவர்களுக்கு நிவாரண உதவிகளை செய்வதற்காகவும், தண்ணீர் குடிக்கக் கொடுத்தல் போன்ற பணிகளில் பங்கு பெற்றார்கள்.இந்தப் பெண்மணிகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணைவியார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் நபிகள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வி ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஃரா (ரலி) அவர்களும் அடங்குவார்கள். புகாரியில் ஓர் அறிவிப்பாளர் அறிவித்துள்ளார்: நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் உம்மு ஸுலைம் (ரலி) அவர்களையும் கண்டேன். இவர்கள் இருவரும் வேகமாக தண்ணீர் நிறைந்த தோல் பைகளை தமது முதுகில் சுமந்து கொண்டிருந்தார்கள். மேலும் மக்களின் வாய்களில் தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்தார்கள். பின்னர் திரும்பி வந்து மீண்டும் அவற்றை நிறைத்தனர். பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு வந்தனர். மேலும் மக்களின் வாய்களில் தண்ணீர் ஊற்றினார்கள். (முஹம்மத் அஹ்மத் பாஷ்மைல் அவர்களின் உஹது போர் நூல், பக்கம் 175, நஃபீஸ் அகாடமி கராச்சி)

ஓர் எழுத்தாளர் எழுதுகின்றார்: கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் சில முஸ்லிம் பெண்கள் போர் நிவாரண உதவிகளுக்காக தயாரானார்கள். அந்தப் பெண்மணிகளில் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பெரியன்னை ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்களும் அடங்குவார்கள். வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றனர்: தோல்வியடைந்த முஸ்லிம் குழுவினர் மதீனாவில் நுழைவதற்கு எண்ணம் கொண்டபோது, ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்கள் அவர்களை சென்று சந்தித்தார்கள். மேலும், அன்னார் (ரலி) அவர்களின் முகங்களின் மீது கைகளால் மண்ணை வாரி வீசத் துவங்கினார்கள். மேலும் சிலரை மிகவும் கடுமையாக திட்டினார்கள். உங்களால் போரிட முடியாது என்றால் பின்னர் நீங்கள் வளையல் அணிந்து கொள்ளுங்கள். உங்களது வாள்களை எங்களிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் பெண்களாகிய எங்களது பணிகளை செய்யுங்கள் என்று கடிந்து கொண்டவாறு கூறினார்கள். அதன் பிறகு வேகமாக போர் மைதானத்தை சென்றடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்கள் காயமுற்றவர்களின் உதவிகளுக்காக ஆயத்தமானார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி போர் வேகமாக நடந்து கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால், போர் நிவாரணத்திற்கான நடவடிக்கையின் போது அன்னார் மீதும் அம்புகள் பட்டுக் கொண்டிருந்தன.

கிதாபுல் காமில் ஃபீ் தாரீக் என்ற இப்னு கஸீரின் நூலில் இவ்வாறு உள்ளது. அதாவது ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்கள் படையில் காயமுற்றவர்களுக்கு குடி தண்ணீர் வழங்கினார்கள். ஹிப்பான் பின் அரிகா என்பவன் அன்னாரின் மீது அம்பை எய்தினான். அப்போது அன்னார் (ரலி) கீழே வீழுந்து விட்டார்கள். மேலும் நிர்வாணமாகிவிட்டார்கள். அதனைக் கண்டு இறைவனின் எதிரி மிகவும் சிரித்தான். இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயம் மிகவும் வேதனையைக் கொடுத்தது. ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களிடம் அன்னார் (ஸல்) ஓர் அம்பைக் கொடுத்தார்கள். பின்னர் அந்த அம்பானது ஹிப்பானுடைய நெஞ்சை சென்று தாக்கியது. மேலும் அவன் கீழே விழுந்து விட்டான். எந்த அளவுக்கு என்றால் அவன் நிர்வாணமாகிவிட்டான். மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவனைக் கண்டு சிரித்தார்கள். ஸஃது அவர்கள் உம்மே அய்மன் (ரலி) அவர்களுக்காக பழிவாங்கி விட்டார்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஒரு வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார்: போர் முடிந்த பிறகு சில நம்பிக்கைக் கொண்ட பெண்மணிகள் ஜிஹாது செய்யும் பொருட்டு போர் மைதானத்தை சென்றடைந்தார்கள். ஆக, ஒரு வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார்: முஸ்லிம்கள் இணை வைப்பாளர்களை பின்தொடர்ந்து செல்ல தொடங்கியபோதும், அவர்களுக்கு வெற்றியின் அடையாளங்கள் தென்படத் துவங்கிவிட்டபோதும் இந்த மகத்துவமிக்க பெண்மணிகள் போர் மைதானத்திற்கு சென்றார்கள். (முஹம்மத் அஹ்மத் பாஷ்மைல் அவர்களின் உஹது போர் நூல், பக்கம் 176-177, நஃபீஸ் அகாடமி கராச்சி)

சுருக்கம் என்னவென்றால், அந்நேரத்தில் முஸ்லிம் பெண்மணிகள் போர்க்களத்தை நோக்கிச் சென்றனர். இதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அவர்கள் முஸ்லிம்களின் படையில் முறையாக இணைந்திருக்கவில்லை தான். முதல் விஷயம், முஸ்லிம்களுடைய துவக்க வெற்றிக்கான செய்தி கிடைத்தபோது, மதீனாவை வந்தடைந்தபோது அந்த செய்தியை செவிமடுத்து விட்டு அவர்கள் உஹதை நோக்கிச் சென்றிருப்பார்கள். ஆனால், அதற்குள் போரின் நிலவரம் மாறிவிட்டிருந்தது. எனவே முஸ்லிம் பெண்களும் கூட போர் மைதானத்தில் பங்கு பெற்றார்கள். இரண்டாவது இந்த விஷயமும் சாத்தியமானதாக இருந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷஹாதத்தின் செய்தி வந்தடைந்தபோது பின்னர் இந்த உயிர் தியாகத்திற்கு தயாராக இருந்த இந்த பெண்மணிகளும் நிம்மதியிழந்து உஹதை நோக்கி புறப்பட்டுச் சென்றிருப்பார்கள். மேலும், பின்னர் அவர்கள் போரின் இந்த இறுதிக்கட்டத்தில் கலந்து கொண்டும் இருந்திருப்பார்கள். அதில் ஒருபுறம் தற்காப்பு தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மற்றொரு பக்கம் காயங்களுக்கு மருந்திடக் கூடியப் பணியும் துவங்கியிருந்தது. எவ்வாறு இருப்பினும் அல்லாஹ்வே நன்கறிவான்.

உஹது போர் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்காக தமது பெற்றோரை ஒன்று கூட்டியிருந்தார்கள். அன்னார்(ஸல்) கூறினார்கள்: இணை வைப்பாளர்களில் ஒரு நபர் இருந்தார்; அவர் முஸ்லிம்களிடத்தில் நெருப்பை மூட்டியிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாரிடம் அதாவது ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் அம்பு எய்துங்கள்; உம் மீது எனது தாய், தந்தை அர்ப்பணம்! அதாவது தாய், தந்தையரை பெற்றோரை ஒன்று திரட்டினார்கள். இதன் பொருள் என்னவென்றால் உம் மீது எனது தாய், தந்தை அர்ப்பணம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் முனைகூர்மை இல்லாத அந்த அம்பை அவன் பக்கம் எய்தேன். அதன் காரணமாக அவன் மாண்டு விட்டான். மேலும் அவனது ஆடை அவிழ்ந்து விட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்ததை நான் கண்டேன். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபளாயிஸ் ஸஹாபா, ஹதீஸ் எண்: 6237)

ஓர் அறிவிப்பில் இந்த சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: அதாவது இந்த இணை வைப்பாளர், அவருடைய பெயர் சில வரலாற்று நூல்களில் ஹிப்பான் என்று கூறப்பட்டுள்ளது. ஓர் அம்பை அவன் எய்தான். அது ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்களின் வயிற்றை சென்று தாக்கியது. அப்போது அன்னார் (ரலி) காயமுற்றவர்களுக்கு தண்ணீர் கொடுக்கும் பணியில் மும்முரமாக இருந்தார்கள். அப்போது ஹிப்பான் சிரிக்கத் தொடங்கினான். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களுக்கு ஓர் அம்பை வழங்கினார்கள். அந்த அம்பானது ஹிப்பானின் தொண்டையில் சென்று பட்டது. மேலும் அவன் பின்னால் விழுந்து விட்டான். அதன் காரணமாக அவனது நிர்வாணம் வெளிப்பட்டு விட்டது. அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். (அல் அஸாபா தொகுதி 3, பக்கம் 64, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1995-ம் ஆண்டு பதிப்பு)

அல்லாஹ் இந்த அபாயகரமான எதிரியை முனை மழுங்கிய அம்பின் மூலமாக வழியிலிருந்து அகற்றிவிட்டான் .உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த மகிழ்ச்சி மற்றும் சிரிப்புக்கு அல்லாஹ்வின் இந்த கருணை காரணமாக இருந்தது. (ஸஹீஹ் முஸ்லிம், தொகுதி 13, பக்கம் 41, அடிக்குறிப்பு நூர் ஃபவுண்டேஷன்)

ஒரே ஒரு தடியானது அவனைக் கொன்று விட்டது.

ஒரு நூலாசிரியர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணிவு மற்றும் அகப்பார்வையைக் குறிப்பிட்டவாறு எழுதியுள்ளார்: அதாவது காலித் பின் வலீதுடைய தலைமையில் குறைஷிய படைகள் குன்றின் மீது நின்று கொண்டிருந்த அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்கள் மற்றும் அன்னாருடைய தோழர்களை ஷஹீதாக்கி விட்டு இஸ்லாமியப் படையின் பின்புறத்தில் இருந்து தாக்குதல் நடத்தி விட்டன. அந்நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒன்பது ஸஹாபிகளைக் கொண்ட குழு மட்டுமே இருந்தது. மற்ற முஜாஹித்கள் எதிரியை பின்தொடர்ந்து சென்றவாறு போர்க் களத்தில் இருந்து தொலைவில் சென்று விட்டார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் காலித் பின் வலீத் மற்றும் குறைஷிய படையின் போர் வீரர்களை பார்த்த உடனேயே ஒரு துணிச்சலான முடிவு எடுத்தார்கள். அவ்வாறு செய்யாமல் இருந்திருந்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அந்தப் போர் வீரர்களின் பார்வை பட்டிருப்பது எளிதாக இருந்தது. அன்னார் (ஸல்) முதலில் சுயமே பாதுகாப்பான இடத்திற்கு சென்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்திருந்தால் இஸ்லாமியப் படைக்கு எண்ணற்ற பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும். எனவே அன்னார் (ஸல்) இந்த முடிவெடுத்தார்கள். அன்னார் (ஸல்) புறமுதுகுக் காட்டுகின்ற வழிக்கு பகரமாக உரத்த குரலில் முழுக்கமிட்டார்கள். ஏனெனில் அதனை கேட்டு விட்டு இஸ்லாமியப் படை பின்புறம் பார்க்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். ஆக, அந்நிலையில் இஸ்லாமியப் படை போர்க் களத்தில் மிகவும் தொலைவில் இருந்தது. மேலும் குறைஷிய போர் வீரர்கள் வரை அன்னாரின் குரல் சென்றடைவது கண்டிப்பானதாக இருந்தது. சோதனைக்குரிய அந்த நேரத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் தன்னிகரற்ற வீரம் அதாவது விநோதமான வகையான மற்றும் தன்னிகரற்ற தீரத்திற்கான முன்மாதிரி வெளிப்பட்டது. ஏனெனில் அன்னார் (ஸல்) தமது உயிரை அபாயத்தில் ஆழ்த்திக் கொண்டு ஸஹாபா பெருமக்களின் உயிரை பாதுகாப்பதற்கு முடிவெடுத்தார்கள். மேலும் மிகவும் உரத்த குரலில் ஸஹாபிகளை அழைத்தார்கள். அல்லாஹ்வின் அடியார்களே! அங்கே என்று கூறினார்கள். அன்னாரின் குரல் போர்க் களம் முழுவதும் ஒலித்தது. ஸஹாபா பெருமக்களுக்கும் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து விட்டனர். அவர்கள் அதிக தொலைவில் இருந்தனர். எனவே அவர்களுக்கு முன் குறைஷிய படை வீரர்களின் ஒரு குழுவினர் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். மேலும்,மற்ற போர் வீரர்கள் விரைவாக முஸ்லிம்களை சுற்றி வளைக்கத் துவங்கி விட்டனர். (கஸ்வாத் வ ஸராயா, பக்கம் 183 - 184, ஃபரீத் பிரிண்டிங் பிரஸ் ஸாஹிவால்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்ற நிலையிலும் சுய நினைவை தக்க வைத்துக் கொண்டது. ஸஹாபிகளுக்கு வழிகாட்டல் வழங்கியது மற்றும் அவர்களுக்கு ஊக்கமளித்தது ஆகியவை தொடர்பான குறிப்பும் கிடைக்கின்றது.ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களின் சகோதரனாக இருந்த உத்பா பின் அபீ வகாஸ் என்பவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஒரு கல்லை தூக்கி வீசினான். அது அன்னாருடைய முகத்தின் சென்று பட்டது. மேலும் அன்னாருடைய கீழ்தாடை பற்கள் அதாவது முன்னால் இருக்கக்கூடிய இரண்டு பற்களுக்கும் கோரைப்பல்லுக்கும் இடையில் இருந்த பல் உடைந்து விட்டது. அத்துடன் அதன் கீழ் உதடும் கிழிந்து விட்டது. புகாரி விளக்கவுரையில் அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானீ அறிவிக்கின்றார்கள்: பல்லின் ஒரு துண்டு உடைந்து விட்டது. வேர் பகுதியுடன் முற்றிலுமாக உடைந்து அது வெளிவரவில்லை. (ஃபத்ஹுல் பாரீ, தொகுதி 7, பக்கம் 464, ஹதீஸ் 4070, கதீமீ குதுப்கானா காராச்சி)

எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்பா பின் அபீ வகாஸிற்கு எதிராக

اَللّٰهُمَّ لَا يَحُوْلُ عَلَيْهِ الْحَوْلُ حَتّٰى يَمُوْتَ كَافِرًا

என்று துஆ செய்தார்கள். பொருள்: அல்லாஹ்வே! இவர் காஃபிராக இருக்கும் நிலையில் ஓர் ஆண்டிற்குள் இவரை மரணிக்கச் செய்து விடுவாயாக.அல்லாஹ் அன்னாருடைய இந்த துஆவை ஒப்புக் கொண்டான். மேலும் அவனை அதேநாளன்று ஹாதிப் பின் அபீ பல்தஆ (ரலி) அவர்கள் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உத்பா பின் அபீ வகாஸுடைய வெட்கங்கெட்ட இந்த செயலைக் கண்டபோது, உத்பா எங்கே இருக்கின்றான்? என்று நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உடனடியாகக் கேட்டேன். அவன் எந்தத் திசையை நோக்கி சென்றானோ அதன் பக்கம் அன்னார் (ஸல்) சைகை செய்தார்கள். நான் உடனடியாகவே அவனைப் பின் தொடர்ந்து சென்றேன்.எதுவரை என்றால், ஓரிடத்தில் நான் அவனை பிடிப்பதில் வெற்றியடைந்து விட்டேன். நான் உடனே அவனை வாளினால் தாக்கினேன். அதன் காரணமாக அவனது கழுத்து துண்டாகி தொலைவில் சென்று விழுந்தது. நான் முன்னால் சென்று அவனது வாளையும், குதிரையையும் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவற்றை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அன்னார் (ஸல்) இந்த விஷயத்தைக் கேட்டு விட்டு,

رَضِيَ اللّٰهُ عَنْكَ. رَضِيَ اللّٰهُ عَنْكَ

என்று இரண்டு முறை கூறினார்கள்.பொருள்: அல்லாஹ் உம் மீது திருப்தி கொண்டு விட்டான். அல்லாஹ் உம் மீது திருப்தி கொண்டு விட்டான்.(ஸீரத்துல் ஹலபிய்யா, தொகுதி2 பக்கம் 317, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

உஹது போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அதாவது நுஸைப்பா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அன்னாரின் கணவர் ஹஸ்ரத் ஸைத் பின் ஆஸிம் (ரலி) மற்றும் அன்னாருடைய இரண்டு மகன்கள் குபைப் (ரலி) மற்றும் அப்துல்லாஹ் ஆகியோர் அனைவருமே போருக்காக சென்றிருந்தார்கள். முன்னரும் நான் குறிப்பிட்டிருந்தேன். மேலும் உங்கள் வீட்டினர் மீது அல்லாஹ் கருணைகளை இறக்குவானாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் அனைவரிடம் கூறியிருந்தார்கள். அல்லாஹ் உமது வீட்டினர் மீது அருள் செய்வானாக! என்று கூறியதாக மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. அப்போது நாங்கள் சொர்க்கத்தில் தங்களுடன் இருக்க வேண்டும் என்று தாங்கள் அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் என்று ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வேண்டினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தவாறு கூறினார்கள்: அல்லாஹ்வே! இவர்களை சொர்க்கத்தில் என்னுடைய நண்பர்களாகவும், தோழர்களாகவும் ஆக்குவாயாக! (இனி) உலகில் என்னுடன் என்ன நடக்கின்றது? என்பதை பற்றி எனக்கு கவலையில்லை என்று அப்போதே ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) கூறினார்கள். (ஸீரத்துல் ஹலபிய்யா, தொகுதி 2, பக்கம் 314, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இந்த தூய பெண் ஸஹாபியாக்களின் துணிவு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசம், அன்பு மற்றும் நன்றியுணர்விற்கான உதாரணம் இதுவாக இருந்தது. மேலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காகவும் அவனது மார்க்கத்திற்காக தியாகம் செய்வதுடன் ஒப்பிடும்போது உலகம் ஒன்றுமற்றதாக இருந்தது. உலகவாதிப் பெண்களுக்கு உலக விஷயம் பெரிதாக இருக்கின்றது. ஆனால், இந்தப் பெண்மணிகளோ மார்க்கத்திற்காக அர்ப்பணமாகக் கூடிய பெண்மணிகளாக இருந்தனர். இதன் எஞ்சிய பகுதி இன்ஷா அல்லாஹ் இனிவரும் நாட்களில் எடுத்துரைப்பேன். தொழுகைக்குப் பிறகு சில மர்ஹூம்களின் ஜனாஸா தொழுகை இருக்கின்றது. அவர்களைப் பற்றியும் குறிப்பிடுவேன்.

முதலாவது நற்குறிப்பு, மதிப்பிற்குரிய கஸ்ஸான் காலித் அந்நகீப் ஸாஹிப். இவர்கள் சிரியாவைச் சேர்ந்தவர் ஆவார்கள். கடந்த நாட்களில் 78 வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். தனக்குப் பிறகு ஒரு மனைவியைத் தவிர ஒரு மகனையும், ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலத்தில் சுயமே பைஅத் செய்தார்கள். பின்னர் அன்னாருடைய தப்லீஃக்கினால் அன்னாருடைய மகனும் பைஅத் செய்து விட்டார். மகள் மற்றும் மனைவி இன்னும் பைஅத் செய்யவில்லை.

மர்ஹூமின் மகன் ஹுஸ்ஸாமுன் நகீப் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: என்னுடைய தந்தை எனது தோழராகவும், நண்பராகவும் இருந்தார்கள். அன்னார் தான் எனக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பைஅத்திற்கான வழியைக் காட்டினார்கள். 1990-களில் எனது தந்தைக்கு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் லிகா மஅல் அரபு என்ற நிகழ்ச்சியின் மூலம் ஏற்பட்டது. அதற்கு முன்னதாக மார்க்கம் என்பது நல்லமுறையில் நடந்து கொள்ளுதலின் பெயராகும் என்ற அளவில் மட்டுமே மார்க்கம் தொடர்பான பார்வையாக எனது தந்தையாருக்கு இருந்தது. ஆனால் லிகா மஅல் அரபு என்ற அதாவது அரேபியர்களுடன் சந்திப்பு என்ற நிகழ்ச்சியைப் பார்த்த பிறகு அன்னார் இவ்வாறு கூறினார்கள்: உலகில் எங்காவது மார்க்க அறிஞர் ஒருவர் இருக்கின்றார் என்றால் அவர் இந்த நபர் தான் அதாவது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) ஆவார்கள். சரியான இஸ்லாமிய மார்க்கம் எங்காவது இருக்கின்றது என்றால் பின்னர் அது இந்த மக்கள் கூறுகின்றதே ஆகும். அந்நேரத்தில் எனது தந்தையாரின் வயது சுமார் 50 ஆக இருந்தது. அந்நேரத்தில் அன்னார் தொழுகையைக் கற்றார்கள். ஏனெனில் அதற்கு முன்பு வரை அன்னார் ஒருபோதும் தொழுததில்லை. பின்னர் அதில் நிலை நின்று விட்டார்கள். எந்த அளவிற்கு என்றால் அன்னார் அதன் பிறகு எப்போதாவது தஹஜ்ஜுத் தொழுகையை கூட தொழாமல் இருந்ததாக எனக்கு நினைவு இல்லை. கூறுகின்றார்கள்: தந்தையார் 2003-ம் ஆண்டு பைஅத் செய்தார்கள். பின்னர் ஒரு மாதத்தில் என்னையும் ஏற்றுக் கொள்ளச் செய்து விட்டார்கள். பின்னர் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வாழ்வின் இறுதி நாட்களில் நிகழ்ந்த விஷயமாகும் இது. அதாவது, தந்தையார் ஜமாஅத்தின் முரப்பி அப்துல் ஹய்யீ பட்ட ஸாஹிப் அவர்கள் மூலமாக வஸிய்யத் அமைப்பைக் குறித்து செவியுற்றபோது உடனடியாக வஸிய்யத் அமைப்பில் இணைந்து விட்டார்கள். முதலில் வஸிய்யத் நூலை படியுங்கள் என்று அப்போது அன்னாரிடம் கூறப்பட்டது. அதற்கு நான் நிச்சயமாக அதனை படிப்பேன்; மேலும் அதனை புரிவதற்கு முயற்சியும் செய்வேன்; ஆனால் இதனால் எனது இந்த அமைப்பின் மீதான நேசம் மற்றும் அதனுடன் கொள்ளும் தொடர்பிற்கான உணர்வில் எந்த மாற்றமும் வராது; இன்னும் கூறப்போனால், இதன் மீதான நம்பிக்கை இன்னும் அதிகரித்து விடும்; இது உண்மை என்பதில் எனக்கு ஏற்கனவே நம்பிக்கை உள்ளது என்று கூறினார்கள்.

எனது தந்தையாருக்கு ஜமாஅத்துடன் அறிமுகம் ஏற்பட்டது. ஜமாஅத்தின் நூல்களில் அன்னாருக்கு எவையெல்லாம் கிடைத்ததோ அவற்றை அன்னார் வாசிப்பதற்கு முயற்சி செய்தார்கள். மேலும் பின்னர் அதனை புரிந்து கம்ப்யூட்டரில் தமது வழிமுறைக்கேற்ப அது தொடர்பாக எழுதி வைத்துக் கொண்டார்கள். தமது குறிப்புகளை எடுத்து வைத்திருந்தார்கள். கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாருடைய கலீஃபாக்களுடைய அனைத்து நூல்களையும் நான் படித்து விடும் அளவிற்கு அல்லாஹ் எனக்கு வாழ்நாளை தந்தருள்வானாக. ஏனெனில் அப்போதுதான் கடந்த கால வாழ்க்கையில் நான் எவற்றையெல்லாம் இழந்திருக்கின்றேனோ அவற்றை என்னால் முழுமை செய்ய முடியும் என்று அன்னார் கூறிவந்தார்கள். மர்ஹூமிற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய தஃப்ஸீரே கபீரின் மீது மிகுந்த நேசம் இருந்தது. அன்னார் அதனை பலமுறை படித்துள்ளார்கள். இந்த மகன் கூறுகின்றார்: எனக்கு எப்போது எந்தவொரு கட்டுரையைக் குறித்தும் ஏதாவது தேவை ஏற்பட்டால் தந்தையார் அந்தக் கட்டுரையை முழு விளக்கத்துடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் நூல்களிலிருந்தும் கலீஃபாக்களின் நூல்களிலிருந்தும் எடுத்துக் கொடுத்து விடுவார்கள்.

இங்கிருந்து எனது குத்பா நேரலையாக ஒளிபரப்பாகின்றது. குத்பா பேருரையின் மொழியாக்கத்தின் சரிபார்ப்புப் பணியையும் மர்ஹூம் செய்து வந்தார்கள். இதேபோன்று அரபி டெஸ்க் சார்பாக மொழியாக்கப் பணிகளை சரிபார்க்கும் பணிகளில் சிலமுறை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பல மணிநேரம் அமர்ந்திருப்பார்கள். கூறுகின்றார்கள்: ஓய்வெடுங்கள் என்று நான் கூறினால் ஜமாஅத் பணிகளை செய்வதிலேயே எனக்கு நிம்மதி கிடைக்கின்றது என்று அன்னார் பதிலளிப்பார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அன்னாருடைய கலீஃபாக்களின் நூல்களின் மொழியாக்கத்தை சரிபார்க்கும் பணிகளின்போது பெரும்பாலும் அன்னாரின் கண்கள் கண்ணீரால் நிரம்பி விடும். பைஅத் செய்தபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் ஒரு ஸஹாபியின் சம்பவத்தை கூறினார்கள்: அன்னார் (ரலி) பைஅத் செய்து கிராமத்திற்கு திரும்பிச் சென்ற போது அன்னார் தமது கிராமத்தின் ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டினார்கள். மேலும் அனைவருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை தொடர்பான செய்தியை கூறினார்கள். அதன் பிறகு தந்தையாரின் வழிமுறையும் அதுவாகவே இருந்தது: அதாவது, அன்னாரை சந்திப்பதற்கு எந்த நபர் வந்தாலும் அது ஐந்து நிமிடம் சந்தித்தாலும் சரியே ; அவருக்கு அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் வருகையைக் குறித்து நிச்சயம் கூறிவிடுவார்கள். மேலும் கூறிவந்தார்கள்:

எனது பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை குறித்த நற்செய்தியை கூறுவதே ஆகும். ஒருவருக்கு புரிந்து விட்டால் சரி ; இல்லையென்றால் குறைந்தபட்சம் நான் விதையை விதைத்து இருக்கின்றேன் ; அதனை முளைக்கச் செய்வது இறைவனின் பணியாகும். அது நேர்வழி காட்டக் கூடிய இறைவனின் பணியாகும்.

சிரியாவின் வஸீம் முஹம்மது ஸாஹிப் அவர்கள் அன்னாரைக் குறித்து எழுதுகின்றார்கள்: ஜுமுஆவிற்கு பிறகு மர்ஹூம் உள்ளத்தை கவரும் வகையிலான வழிமுறையில் தர்ஸ் வழங்கி வந்தார்கள். 2019 முதல் 2022 வரை அன்னார் செகரட்டரி இஷாஅத் ஆக தொண்டாற்றி வந்தார்கள். மர்ஹூம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை படிப்பதில் எல்லையற்ற ஆர்வம் கொண்டிருந்தார்கள். இன்னும் கூறப்போனால், அன்னார் சுயமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களில் வரக்கூடிய கடினமான சொற்களின் பொருள் மற்றும் விளக்கத்தை எழுதி வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் தஃப்ஸீரே கபீரின் மொழியாக்கத்தை படித்து அதிலிருந்து நபிமார்களின் சம்பவங்களை தனியாகப் பிரித்து அதன் சுருக்கத்தை ஒரு நூலின் வடிவில் முன்வைத்து விட்டார்கள். அது ஜமாஅத்தின் அரபு வெப்சைட்டில் இருக்கின்றது. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மற்றும் குறிப்பாக குழந்தைகள் இதிலிருந்து அதிகம் பயன்பெறுகின்றனர்.

அப்பாதா பர்போஷ் ஸாஹிப் அத்தக்வா பத்திரிகையின் ஆசிரியர் ஆவார்கள். கூறுகின்றார்கள்: மர்ஹூம் எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் அசாதாரண நேசம் மற்றும் நன்றியுணர்வு மிக்க தொடர்பு இருந்தது. முதுமை மற்றும் பணிகள் போன்ற விஷயங்களுக்கு மத்தியிலும் மர்ஹூம் தன்னார்வத் தொண்டின் அடிப்படையில் அத்தக்வா பத்திரிகையில் தொண்டாற்றி வந்தார்கள். மேலும் எப்போது என்ன பொறுப்பு வழங்கப்பட்டாலும் அதனை தமது நற்பேறாக அன்னார் கருதி வந்தார்கள். ஏழு ஆண்டுகள் மர்ஹூம் அத்தக்வா பத்திரிகையில் பழைய இதழ்களை டைப் செய்வது மற்றும் அவற்றை கம்போஸிங் செய்வதில் எங்களுக்கு மிகவும் உதவி செய்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் துஆக்களை அன்னாரின் பிள்ளைகளுக்கு ஆதரவாக ஒப்புக் கொள்வானாக.

இரண்டாவது நற்குறிப்பு இங்கு ஆர்காயிவ் துறையிலும், அல்ஹகம் பத்திரிகையிலும் இருக்கக் கூடிய ஜமாஅத்தின் முரப்பி அன்பிற்குரிய ஜலீஸ் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மனைவி அன்பிற்குரிய நவ்ஷாபஃ முபாரக் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் பாகிஸ்தானிலிருந்து திரும்பி வரும்போது ரப்வா மற்றும் லாஹூருக்கிடையில் நிகழ்ந்த ஒரு சாலை விபத்திற்கு இரையாகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّآ إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் தமது கணவர் மற்றும் பெற்றோர் மட்டுமின்றி நான்கு சகோதரர்களையும், இரண்டு சகோதரிகளையும் பின்னால் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமாவுடைய வஸிய்யத் தொடர்பான நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குள் திடீரென மரணம் நிகழ்ந்து விட்டது. எவ்வாறு இருப்பினும் அந்த நடவடிக்கை நடந்து கொண்டு தான் இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் அன்னாருடைய வஸிய்யத் ஏற்றுக் கொள்ளப்பட்டு விடும். இந்த அடிப்படையில் அவர் வஸிய்யத் செய்தவராக இருக்கின்றார். அன்னாருடைய கணவர் அன்பிற்குரிய ஜலீஸ் அஹ்மத் எழுதுகின்றார்: அல்லாஹ் எனக்கு எப்படிப்பட்ட மனைவியை வழங்கியிருந்தான் என்றால் அவர் ஏராளமான சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார். இதற்காக நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றேன். அவர் வாழ்வை அர்ப்பணித்தவருடன் திருமணம் செய்வதற்கு முடிவெடுத்தார். எப்போதும் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார். ஒருமுறை கூட என்னிடம் அவர் எந்த கோரிக்கையும் வைத்ததில்லை. எப்போதும் பிறருடைய மகிழ்ச்சிக்கு காரணியாக திகழ்ந்து வந்தார். ஜமாஅத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்து வந்தார். துணை செகரட்டரி மால் ஆகவும், துணை வஸிய்யத் செயலராகவும் ஒத்துழைப்பு நல்கி வந்தார். மிகவும் ஆர்வத்துடனும், உழைப்புடனும் பணி செய்து வந்தார். கூறுகின்றார்கள்: எனது பணிகளிலும் எனக்கு உதவி செய்து வந்தார். ஒருபோதும் எனது ஜமாஅத் பணிகளில் ஆட்சேபனை செய்யவில்லை. அவர் எந்த முறையீடும் செய்ததில்லை. உண்மையில், வாழ்வை அர்ப்பணிப்பதல் என்பதின் ஆன்மாவை சரியான பொருளில் புரிந்து வைத்திருந்தார்.

ஒவ்வொரு ரமலானிலும் குறைந்தது மூன்று முறை மற்றும் சிலமுறை நான்கு முறை திருக்குர்ஆனை மொழியாக்கத்துடன் ஓதி முடித்து விடுவார். கிலாஃபத்தின் மீது ஆழமான கண்ணியமும், நேசமும் கொண்டிருந்தார். அன்னாருடைய தாயார் ஸைனப் அந்நிஸா ஸாஹிபா கூறுகின்றார்கள்: மர்ஹூமா எனது பிள்ளைகளில் எல்லாரையும் விட மிகவும் இளையவள் ஆவார். எல்லாரிடமும் மிகவும் அன்பு செலுத்தக் கூடியவராகவும், எல்லாரிடமும் இனிமையாக பழகக் கூடியப் பிள்ளையாக இருந்தார். எங்கள் அனைவரையும் அதிகம் நேசித்தார். எனது அனைத்து பிள்ளைகளிலும் அதிக புரிதல் கொண்டவளாக இருந்தார். நோன்பு மற்றும் தொழுகையைப் பேணக் கூடியவராக இருந்தார். ஜமாஅத் பணிகளில் எல்லாரையும் விட முன்னணியில் இருந்து வந்தார். ஹாஃபிழாபாத் கிராமத்தில் பீர்கோட் ஸானியில் லஜ்னா ஸத்ராக நான் இருந்தபோது பணிகளில் எனக்கு மிகவும் உதவி செய்து வந்தார். ரப்வா வந்த பிறகும் கூட ஜமாஅத் பணிகளில் மிகவும் உதவி செய்தார்.

காம்ரான் ஷாஹித் சகோதரர் ஆவார். அவர் கூறுகின்றார்: மர்ஹூமா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் மியான் நிஸாமுத்தீன் ஸாஹிப் பாஃபந்தா அவர்களின் கொள்ளுப் பேத்தியாக இருந்தார். பெரியவர்களுடனும், சிறியவர்களுடனும் பரிவுடன் நடக்ககூடியவராகவும், எல்லாரிடமும் அன்பு செலுத்தக் கூடியவராகவும் இருந்தார். மேலும் கிலாஃபத்துடன் மிகுந்த தூய்மை மற்றும் நன்றியுணர்வு மிக்க தொடர்பு இருந்தது. அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அனைவருக்கும், அவருடைய பெற்றோருக்கும், கணவருக்கும், உறவினர்களுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு, ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மர்ஹூம் அப்துல் ஹமீத் கான் ஸாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய ரஸியா ஸுல்தானா ஸாஹிபா அவர்களுடையதாகும். மர்ஹூமா ஐவரிகோஸ்டின் அமீர் மற்றும் முபல்லிஃக் இன்சார்ஜ் அப்துல் கய்யூம் பாஷா ஸாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். மர்ஹூமா கடந்த நாட்களில் 92 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّآ إِلَيْهِ رَاجِعُوْنَ அல்லாஹ்வின் அருளினால் மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள்.

கய்யூம் பாஷா ஸாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூமா முன்னாள் வகீலே ஆஃலா தஹ்ரீகே ஜதீத் மதிப்பிற்குரிய மர்ஹூம் சவ்த்ரி ஹமீதுல்லாஹ் ஸாஹிப் அவர்களின் சகோதரியாக இருந்தார். பெற்றோர்கள் 1929-ல் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டனர். துவக்கம் முதலே ரூஹானீ கஸாயினை படிப்பதற்கு எல்லையற்ற ஆர்வம் கொண்டிருந்தார்கள். எனவே அன்னார் தமது வாழ்வில் பலமுறை ரூஹானீ கஸாயினை படிப்பதை முழுமை செய்ததுடன் தஃப்ஸீரே கபீர் மற்றும் இதர ஜமாஅத் நூல்களையும் படித்தார்கள். தமது முஹல்லாவில் தாருல் உலூம் மத்தியப் பகுதியில் ஸத்ர் லஜ்னாவாகவும், செகரட்டரி மால் ஆகவும் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். கூறுகின்றார்கள்: உங்களுக்கு ஒரே மகன் தான் இருக்கின்றார்; உங்களுடைய கணவரோ மரணமடைந்து விட்டார்;இவரை மிகக் குறைந்த அளவு அலோவன்ஸ் கிடைக்கும் ஜாமிஆவில் முரப்பியாக ஆக்குவதற்கு பகரமாக வேறு ஏதாவது துறையில் அனுப்புங்கள் என்று எனது சில உறவினர்கள் தாயாரிடம் கூறினார்கள். அதற்கு, இவர் ஜாமிஆவில்தான் சேருவார்; ரிஸ்க்கைப் பொறுத்த வரை அது அல்லாஹ் உணவளிப்பவன் ஆவான். எனக்கு அவன் மீது நம்பிக்கை உள்ளது என்று எனது தாயார் பதில் அளித்தார்கள். கூறுகின்றார்கள்: எனது தாயாருக்கு பென்ஷன் கிடைக்கும்போதெல்லாம் அல்லது வேறு வகையில் வருமானம் கிடைத்தால் உடனடியாக செகரட்டரி மால் அவர்களின் வீட்டிற்கு சென்று தமது சந்தாவை கொடுத்து விட்டு வருவார்கள். செகரட்டரி மால் அவர்களுக்கு சந்தா வாங்குவதற்காக எங்களது வீட்டிற்கு வரவேண்டிய அவசியம் ஒருபோதும் ஏற்படவில்லை. மர்ஹூமா ஒரு மகனையும், இரண்டு மகள்களையும் தமக்குப் பின்னால் விட்டுச் சென்றுள்ளார். மர்ஹூமாவின் மகன் அப்துல் கய்யூம் ஸாஹிப் பாஷா அவர்கள் நான் கூறியது போன்று ஐவரிகோஸ்டில் மிஷனரி இன்சார்ஜ் ஆவார்கள். மேலும் செயற்களத்தில் இருந்ததன் காரணத்தினால் தமது தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அன்னாருக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. மேலும் அன்னாரின் தாயாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

அடுத்த நற்குறிப்பு, லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மது ஸலீம் ஸாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய புஷ்ரா பேகம் ஸாஹிபா அவர்களுடையதாகும்.

மர்ஹூமா ஸிராலியோனின் முபல்லிஃக் இன்சார்ஜ் முஹம்மது நயீம் அஸ்ஹர் ஸாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். அன்னார் கடந்த நாட்களில் 78 வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن
அல்லாஹ்வின் அருளினால் மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். தமது நினைவாக மர்ஹூமா இரண்டு மகன்களையும், ஐந்து மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமாவின் மகன் முஹம்மது நயீம் அஸ்ஹர் ஸாஹிப் செயற் களத்தில் இருந்ததன் காரணத்தினால் தமது தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ளமுடியவில்லை ; நல்லடக்கத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.

நயீம் அஸ்ஹர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: தாயார் பிறப்பால் அஹ்மதியாக இருக்கவில்லை. ஆனால் உறவினர்கள் அஹ்மதிகளாக இருந்தனர். மேலும் அன்னாருக்கு உண்மைக்கான தேடுதலின் துடிப்பு இருந்தது. அல்லாஹ்வின் சன்னிதானத்தில் மிகவும் அதிகமாக துஆ செய்து வந்தார்கள். அதன் பிறகு அன்னாருக்கு மனநிறைவு கிடைத்தது. மேலும் இறுதியில் 1964-ம் ஆண்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்து விட்டார்கள். மேலும் வாழ்நாள் முழுவதும் இந்த உறவை மிகவும் நன்றியுணர்வுடனும் நிறைவேற்றினார்கள். மேலும் அஹ்மதிய்யத்திற்காக எல்லா வகையான தியாகத்திற்காகவும் ஆயத்தமாக இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளினால் துஆ செய்யக் கூடிய பெண்மணியாகவும், ஐவேளை தொழுகைகள் மட்டுமின்றி தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், துணிவு மற்றும் தைரியம் படைத்த பெண்மணியாகவும் இருந்தார்கள். துன்பங்களை அமைதியாக சகித்துக் கொள்ளக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். எனினும் நாவினால் எந்த முறையீடும் செய்ய மாட்டார்கள். காலத்தின் கலீஃபாவின் பொருள் தியாகத்திற்கான எல்லாத் திட்டங்களிலும் போட்டிப் போட்டுக் கொண்டு பங்கெடுத்து வந்தார்கள். ஜமாஅத் சந்தாக்களை முறையாக முதன்மையான நேரத்தில் செலுத்தி வந்தார்கள். மேலும் பின்னர் கூடுதலாகவும் சந்தாக்களையும் செலுத்தி வந்தார்கள். தேவையுடைய ஒவ்வொருவருக்கும் தமது சக்திக்கேற்ப உதவி செய்வார்கள். மேலும், ஒருபோதும் எவரையும் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பமாட்டார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாருடைய துஆக்களை அன்னாரின் பிள்ளைகளுக்கு ஆதரவாக அல்லாஹ் ஒப்புக் கொள்வானாக!

அடுத்த நற்குறிப்பு, மதிப்பிற்குரி ரஷீத் அஹ்மத் ஸாஹிப் சவ்த்ரி அவர்களுடையதாகும். அன்னார் நார்வேவைச் சேர்ந்தவர் ஆவார்கள். சவ்த்ரி குலாம் ஹுஸைன் அவ்ரோஸேர் ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். அன்னார் கடந்த நாட்களில் 82 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

தமது நோயை மிகவும் தைரியத்துடனும், வீரத்துடனும் பொறுமையுடனும் எதிர் கொண்டார்கள். சில காலமாக நோயுற்றிருந்தார்கள். அன்னாருடைய தந்தை சவ்த்ரி குலாம் ஹுஸைன் ஸாஹிப் அவ்ரோஸேர் 1926-ம் ஆண்டில் சுயமே காதியான் சென்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்யும் கண்ணியத்தைப் பெற்றிருந்தார்கள். மேலும் அதன் பிறகு வாழ்வை அர்ப்பணித்து விட்டார்கள்.மேலும் அன்னாருக்கு காதியான் தாருல் கஸாவிலும், ரப்வாவிலும் காஸியாக தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. இதேபோன்று தலைமையக கட்டடங்களின் கட்டுமானத்தின் மேற்பார்வை தொடர்பாகவும் தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்தது. இரண்டாவது கிலாஃபத் மற்றும் மூன்றாவது கிலாஃபத் காலத்திலும் கஸ்ரே கிலாஃபத் மற்றும் இதர ஜமாஅத் கட்டடங்களில் எலக்ட்ரீஸியனாக அன்னார் அதிகம் பணி செய்துள்ளார்கள். 1970-ல் நார்வே சென்று விட்டார்கள். அங்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் எப்போதும் முன்னணியில் இருந்து வந்தார்கள். அன்னாரின் தன்னிகரற்ற தொண்டுகள் இருக்கின்றன. நார்வேயின் முதலாவது தலைமையகப் பணிகளில் அன்னார் ஆற்றிய தன்னிகரற்ற தொண்டுகளும் அடங்கும். ஜமாஅத்தின் ஒரு பெரும் தொகையை அன்னார் அங்கு பணி செய்து சேமித்தார்கள். நீண்ட காலம் வரை நார்வே ஜமாஅத்தில் செகரட்டரி உமூரே ஆமாவாக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள்.

அன்னாரின் மகன்கள் முஸஃபர் சவ்த்ரி மற்றும் முனவ்வர் சவ்த்ரி ஆகியோர் எழுதுகின்றனர்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடைய நார்வே சுற்றுப் பயணத்தின் அனைத்து பொறுப்புகளும் அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

ஹுஸூர் (ரஹி) அவர்கள் அன்னாரை நார்வேயின் கைட்(வழிகாட்டி) என்று கூறிவந்தார்கள். குத்பா ஜுமுஆவிலும் அன்னாருடைய தொண்டுகளை குறிப்பிட்டுள்ளார்கள். கலீஃபா ஆன பிறகு என்னுடனும் மிகுந்த நன்றியுணர்வு மிக்க தொடர்பு கொண்டிருந்தார்கள். முன்னரும் நான் அன்னாரை அறிந்திருந்தேன். ஆனால் பின்னர் அந்தத் தொடர்பு அதிகரித்து விட்டது. அன்னாருடைய தந்தையாரும் என்னுடைய தந்தைக்கு நெருக்கமானவராக இருந்தார்கள்; தொடர்பு வைத்திருந்தவராக இருந்தார்கள். சிறுவயது முதலே சவ்த்ரி ஹுஸைன் ஸாஹிபை நாங்கள் பார்த்துள்ளோம். எப்போதும் புன்னகை செய்யக் கூடியவராக இருந்தார்கள். மிகவும் நல்லியல்பு படைத்தவராக இருந்தார்கள். சவ்த்ரி ரஷீத் ஸாஹிப் அவர்களின் பழக்கவழக்கங்களும் தந்தையாருடன் ஒப்புமை கொண்டிருந்தாக இருந்தது.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மார்க்கம்,சமுதாயம் என எந்தப் பாகுபாடுமின்றி இறைவனின் படைப்பினத்திற்கு எப்போதும் தொண்டாற்றுவதற்கு தயாராக இருந்து வநதார்கள். அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் மனைவி மட்டுமின்றி, இரண்டு மகன்களும், நான்கு மகள்களும் அடங்குவர். மேலும் இவர்கள் ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜ் மதிப்பிற்குரிய இனாமுல் ஹக் ஸாஹிப் அவர்களின் சகோதரியின் கணவர் ஆவார்கள். அல்லாஹ் அனைவருக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. தொழுகைக்குப் பிறகு நான் கூறியதுபோன்று இவர்களுடைய ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன்.

தமிழாக்கம்

முபல்லிஃக் அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

12ம் பக்கத் தொடர்ச்சி...
(குத்பா பேருரை முஸ்லிஹ் மவ்வூத் தினம்)

கொண்டுள்ளன. தம்மை பின்பற்றக் கூடிய மக்களிடத்தில் இந்த அளவு நேசத்தையும், தியாக மனப்பான்மையையும் மர்ஹூம் அவர்கள் உருவாக்கி இருக்கின்றார்கள். தற்காலத்து மக்களிடையே மிக அரிதாகவே இத்தகைய தலைவர்கள் காணக் கிடைப்பார்கள். அன்னாரைப் பின்பற்றக் கூடிய மக்களிடத்தில் இந்த உத்வேகமான அன்பும், தியாகமும் கிடைத்தது.

அன்னாருடைய வாழ்வு வரை மட்டும் அது கிடைக்கவில்லை. மாறாக அன்னாரின் வாழ்விற்கு பிறகும் கூட அது வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து அறுபதாயிரம் மக்கள் தம்மை விட்டுப் பிரிந்த இமாமிற்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பித்து பிடித்தவர்களைப் போன்று வந்து கொண்டிருக்கின்றார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் மிர்ஸா ஸாஹிப் அவர்களின் பெயர் சமுதாயத்தைக் கட்டமைத்த ஒரு மகத்துவ மிக்கத் தலைவரைப் போன்று என்றும் உயிருடன் இருக்கும். அன்னார் மிகவும் கடுமையான கஷ்டங்களின்போதும் ஒரு உறுதியான ஜமாஅத்தை நிலைநாட்டிக் காட்டியுள்ளார்கள். எவ்வாறான ஆற்றலாக மாற்றிக் காட்டினார்கள் என்றால், நம்மால் அதனை கண்டும் காணாமல் இருக்க முடியாது. அன்னார் ஒரு மாபெரும் தலைவராக இருந்தார்கள் என்ற இந்த விஷயத்தை கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் லாஹூர் ஜமாஅத்தின் செய்தித்தாளினாலும் கூட வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

எவ்வாறு இருப்பினும், இது அந்த மக்கள் மனம் திறந்து வெளிப்படுத்திய சிந்தனைகள் ஆகும். இதேபோன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைக் குறித்து அந்நியர்களின் எண்ணற்ற கருத்துகள் உள்ளன. இது தவிர, அன்னார் பல தலைப்புகளில் ஜமாஅத்திற்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவாக வழங்கிய வழிகாட்டல்களும், அறிவுரைகளும் உள்ளன. அவை ஏராளமான தலைப்புகளைக் கொண்டதாக இருக்கின்றன. பல தொகுதிகளைக் கொண்டதாக இருக்கின்றன. அவற்றில் சில அச்சிடப்பட்டு வெளிவந்து விட்டன. சில அச்சிடப்பட்டு வருகின்றன. சொற்பொழிவுகளின் தொகுதிகள் மட்டுமே 35,36 தொகுதிகள் உள்ளன. 26,27 அல்லது 28 குத்பாக்களின் தொகுதிகள் இருக்கின்றன.

எவ்வாறு இருப்பினும் பல அறிவுரைகளை அன்னார் வழங்கியுள்ளார்கள். எல்லாவற்றையும் விட பெரிய விஷயம் என்னவென்றால் எந்தவொரு பள்ளிக் கூடத்திலோ அல்லது மதரஸாவிலோ பல்கலைகழகத்திலோ அன்னார் (ரலி) எதுவும் படித்திராதபோதிலும் திருக்குர்ஆனின் ஞானத்தை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்தான். அதற்கு நிகரான ஒன்றை நம்மால் காண முடியாது. இதைக் குறித்தும் அந்நியர்களின் எண்ணற்ற கருத்துகள் இருக்கின்றன. கடந்த காலங்களிலும் இதனை நான் எடுத்துரைத்து வந்துள்ளேன். தற்போது பழைய காலங்களில் அச்சிடப்படாத அன்னாரின் குறிப்புகளும் கிடைத்துள்ளன.(தொடரும்.....)

* * * * *

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

# ஜுமுஆ பேருரை

**வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி குறித்த முன்னறிவிப்பின் சில அம்சங்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அருளுக்குரிய இருப்பின் மீது முழுமையடைந்ததன் பின்னணியில் நீதியை விரும்பக் கூடிய மற்றும் ஜமாஅத்தைச் சாராத சில சகோதரர்களின் தாக்கங்கள்**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் 52 ஆண்டு கால கிலாஃபத் காலகட்டத்தின் ஒவ்வொரு நாளும் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியததற்கான அடையாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது

**நான் இன்று வரை இதுபோன்ற அறிவுப்பூர்வமான உரையாடலையும் ஆதாரப்பூர்வமான உரையையும் எந்தவொரு முஸ்லிமுடைய நாவிலிருந்தும் செவிமடுத்ததில்லை. உங்களது கலீஃபா மாபெரும் அறிஞர் ஆவார் என்றும் மார்க்க உலகில் அவரது பார்வை மிகவும் ஆழமானது என்றும் தெரிய வருகின்றது ( அமெரிக்க பாதிரியார்)**

**பாகிஸ்தான் மற்றும் ஏமனின் அஹ்மதிகளுக்காகவும், பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 பிப்ரவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **23ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

மவ்லானா முஹம்மது அலி ஜவ்ஹர் ஸாஹிப் அவர்கள் 1878 ஆம் ஆண்டு பிறந்தார்கள். அவர்கள் 1931-ம் ஆண்டு மரணமடைந்தார்கள். ராம்பூர் என்ற இடத்தில் பிறந்தார்கள்.கல்கத்தாவில் காம்ரேட் என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார்கள். டெல்லியில் ஹம்தர்த் என்ற பெயரில் உருதுவில் பத்திரிகை ஒன்றை துவங்கினார்கள். 1921-ம் ஆண்டு டெல்லியில் ஆல் இன்டியா கான்ஃபிரன்ஸின் தலைவராக ஆக்கப்பட்டார்கள். வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றிருந்தார்கள். 1931-ம் ஆண்டு ஜனவரி 5ம் தேதி அன்று அங்கே அன்னார் மரணமடைந்தார்கள். பாகிஸ்தான் உருவாக்கம் மற்றும் கட்டமைப்பு அதனுடைய முன்னேற்றம் போன்றவற்றில் ஒவ்வொரு நிலையிலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் தொண்டுகள் தெளிவாக இருக்கின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: அஹ்மதிகள் என்ன செய்தார்கள்? என்று கூறக் கூடியவர்கள் இருக்கின்றனர். பாருங்கள் அஹ்மதிகள் செய்தது பகிரங்கமான தொண்டுகள் என்று அந்நியர்கள் கூட அவற்றை ஒப்புக் கொள்கின்றனர். ஆனால், மவ்லானா ஜவ்ஹர் அலி ஸாஹிப் தமக்கு ஏற்பட்ட தாக்கத்தை தம்முடைய ஹம்தர்த் என்ற பத்திரிகையில் 1976-ம் ஆண்டு செப்டம்பர் 26-ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஜனாப் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் மற்றும் அன்னாருடைய ஜமாஅத்தின் கட்டமைப்பை இந்த வரிகளில் குறிப்பிடவில்லையென்றால் அது நன்றிக் கேடாக ஆகிவிடும். அன்னார் தமது அனைத்து சிந்தனைகளையும் எவ்வித கொள்கை வேறுபாடுகளுமின்றி அனைத்து முஸ்லிம்களின் நலனுக்காகவும் அர்ப்பணித்து இருந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் மற்றும் அன்னாருடைய ஜமாஅத் ஒரு பக்கம் முஸ்லிம்களுடைய அரசியலில் ஆர்வம் காட்டினார்கள் என்றால் மறுபுறம் முஸ்லிம்களுடைய அமைப்பு, தப்லீஃக் மற்றும் வியாபாரத்திலும் மிகவும் அதிக அளவில் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். இது அஹ்மதிகளின் பங்களிப்பாக இருந்தது. இஸ்லாத்தின் இந்த கட்டமைப்பு கொண்ட ஜமாஅத்தின் வழிமுறை இஸ்லாமிய அமைப்புகளுக்கு பொதுவாக வழிகாட்டியாக இருக்கின்ற வேளையில் குவிமாடங்களில் அமர்ந்து கொண்டு இஸ்லாமிய தொண்டுகளுக்கான முழக்கங்களை இடக் கூடிய வெற்று வாதங்களை செய்கின்ற பிரிவுகளுக்கு குறிப்பான முறையில் வழிகாட்டக் கூடியதாக இருக்கும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை ; அதாவது பெரும் பெரும் சொற்பொழிவு மேடைகளில் அமர்ந்து கொண்டு வாதம் செய்கின்றனர்; நாங்கள் மார்க்கத் தலைவர்களாக இருந்து கொண்டு வெளிப்படையில் பெரும் பெரும் வாதங்களை செய்கின்றனர். அன்னார் கூறுகின்றார்கள்: அவர்களின் அகமும், புறமும் வெவ்வேறானதாக இருக்கின்றது. ஆனால் உட்புறத்தில் அவர்களின் வெற்று வாதங்களை மட்டுமே எஞ்சி இருக்கின்றன. மிகவும் வீணான வாதங்களாக அவை இருக்கின்றன. அப்படிப்பட்ட மக்களுக்காகவும் இவர்கள் வழிகாட்டியாக இருப்பார்கள். அவ்வாறான ஒருநாள் வரும்; அதனை நீங்கள் காண்பீர்கள் என்று அவர் எழுதியிருக்கின்றார்.

இதுதான் நீதியை விரும்பக் கூடிய ஆலிம்களின் கருத்தாகும். இன்றைய காலத்து ஆலிம்கள் பாகிஸ்தானில் அஹ்மதிகளை இஸ்லாத்தின் எதிரிகள் என்று கூறுகின்றனர். இஸ்லாத்தைக் குறித்த வேதனை அஹ்மதிகளிடம் உள்ளதா? அல்லது இந்தப் பெயர் தாங்கி ஆலிம்களிடம் உள்ளதா? என்பதை இந்தக் கண்ணாடியில் தங்களது முகத்தைப் பார்க்க வேண்டும்.

ஸய்யித் ஹபீப் ஸாஹிப் என்ற ஓர் ஆளுமை 1891-ம் ஆண்டில் பிறந்தார்கள். உருது மொழியின் மிகவும் பிரபல்யமான மற்றும் தனித்துவம் வாய்ந்த பத்திரிகையாளராக இருந்தார்கள். பூல் மற்றும் தஹ்ரீகே நிஸ்வான் இதழின் ஆசிரியராக அன்னார் இருந்தார்கள்.மிகவும் அச்சமற்ற மற்றும் துணிவுள்ள பத்திரிகையாளராக இருந்தார்கள். 1951-ம் ஆண்டில் அன்னார் மரணமடைந்தார்கள். 1931-ம் ஆண்டு ஜூலை 25-ம் தேதி ஆல் இந்தியா காஷ்மீர் கமிட்டி நிறுவப்பட்டது.ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அந்தக் கமிட்டியின் தலைமைப் பொறுப்பை ராஜினாமா செய்து விட்டார்கள். அந்தக் கமிட்டி நிறுவப்பட்டபோது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அனைத்து முஸ்லிம்களின் சார்பாகவும் ஏகமனதாக தலைவராக தேர்ந்தெடுக்கப்படிருந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அதன் தலைமைப் பொறுப்பை ராஜினாமா செய்து விட்டார்கள். ஸய்யிது ஹபீப் ஸாஹிப் ஸியாஸத் லாஹூர் என்ற தம்முடைய பத்திரிகையில் 1933 மே 18-ம் தேதி இவ்வாறு எழுதினார்கள்: என்னுடைய புரிதலை பொறுத்த வரை உயர்ந்த தகுதிகள் இருந்தபோதிலும் டாக்டர் இக்பால் அதாவது அல்லாமா இக்பால் ஸாஹிப் மற்றும் பரகத் அலி ஸாஹிப் ஆகிய இருவரும் இந்த வேலையை நடத்துகின்றனர். காஷ்மீருடைய நிலை மிகவும் இக்கட்டானதாக இருந்த காலகட்டத்தில் கொள்கை வேறுபாடுகள் இருந்தபோதிலும் எந்த மக்கள் ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிபை தலைவராக தேர்ந்தெடுத்து இருந்தனரோ அவர்கள் பணியின் வெற்றியைக் கருத்தில் கொண்டவாறு மிகச் சிறந்த தேர்ந்தெடுப்பை செய்திருந்தார்கள் என்பது உலகிற்கு தெளிவாகி விடும். அந்தக் காலத்தில் கொள்கை வேறுபாட்டின் காரணமாக மிர்ஸா ஸாஹிபை தேர்ந்தெடுக்காமல் இருந்திருந்தால் இந்த இயக்கம் முற்றிலும் தோல்வியடைந்திருக்கும். கருணை காட்டுவதற்கு தகுதியான இந்த சமுதாயம் கடுமையான பாதிப்பை சந்தித்து இருக்கும். என்னுடைய கருத்து என்னவென்றால், மிர்ஸா ஸாஹிப் விலகிச் சென்றது கமிட்டியின் மரணத்திற்கு சமமானதாக இருக்கின்றது. அதன் காரணமாக நாம் தேர்ந்தெடுத்திருப்பவர் எப்படிப்பட்டவர் என்பது தற்போது உலகிற்கு தெளிவாகி விடும். மிர்ஸா ஸாஹிப் என்ன பணி செய்தார்? டாக்டர் அல்லாமா இக்பால் ஸாஹிப் என்ன பணி செய்கின்றார்? அவர்கள் இல்லாமல் அவருடைய கமிட்டி என்ன பணி செய்கின்றது? என்பது தற்போது தெளிவாகிவிடும். பிறகு என்னவாயிற்று என்பதை பின்னர் உலகம் கண்டு கொண்டது. அனைத்தும் முன்னால் தான் உள்ளது.

இந்தப் பணிகளை அன்னார்(ரலி) எதற்காக செய்தார்கள் என்றால், கைதிகளின் விடுதலைக்கான வேதனை அன்னாரிடத்தில் காணப்பட்டது. அதற்கு காரணியாக அன்னார் (ரலி) திகழ இருந்தார்கள். அன்னார் (ரலி) தலைமைப் பொறுப்பை விட்டு விட்டபோதிலும், அந்தக் கமிட்டியில் அன்னார் (ரலி) பணியாற்றினார்கள். அந்த வேதனையின் காரணமாக பின்னால் இருந்து கொண்டு சாத்தியமான அனைத்து உதவிகளையும் அன்னார் (ரலி) செய்து கொடுத்தார்கள்.இதற்கு வரலாறு சாட்சியாக இருக்கின்றது.

மவ்லானா அப்துல் மாஜித் தர்யாபாதி ஸாஹிப் அவர்கள் 1892-ம் ஆண்டு பிறந்தார்கள். இந்தியாவின் உருது இலக்கியவாதியும், எழுத்தாளரும், ஆய்வாளரும், திருக்குர்ஆன் விரிவுரையாளருமாக அன்னார் திகழ்ந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மரணத்தையொட்டி மவ்லானா அப்துல் மாஜித் ஸாஹிப் அவர்கள் ஷிர்கே ஜதீத் என்ற தமது பத்திரிகையில், 1965- நவம்பர் 18 அன்று இவ்வாறு செய்தி வெளியிட்டார்கள்:

அன்னாருடைய மற்ற கொள்கைகள் எவ்வாறானதாக இருந்தபோதிலும் திருக்குர்ஆன் மற்றும் திருக்குர்ஆன் ஞானத்தை உலகளவில் பரப்பியது, விண்ணளவு மேலோங்கச் செய்தது, தப்லீஃக்கில் செய்த முயற்சிகள், ஈடுபாடுகள் மற்றும் தமது திடமான உறுதியுடன் தமது நீண்ட கால வாழ்வில் அவற்றை தொடரச் செய்தது போன்றவற்றிற்கான கூலியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவான்.

இவ்வாறு கூறக் கூடிய இந்த நபர் சுயமே திருக்குர்ஆன் விரிவுரையாளரக இருந்தார். ஆயினும்,ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களை குறித்து இவ்வாறு எடுத்துரைத்து

இருக்கின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மேலும் அல்லாஹ் அன்னாரின் இந்தத் தொண்டுகளின் விளைவாக அவர்களுடைய பொதுவான விவகாரங்களை மன்னித்தருள்வானாக. எவ்வாறிருப்பினும் அவர்கள் தொடர்ச்சியாக எழுதுகின்றார்கள்: அறிவுக் களத்தில் திருக்குர்ஆனுடைய உண்மைகள், விளக்கங்கள், ஞானங்களை மற்றும் மொழியாக்கம் போன்றவற்றை அன்னார் வழங்கி விட்டார்கள். அதற்கும் ஒரு மேலான தனிச்சிறப்பும், அந்தஸ்தும் உள்ளது.

முஸ்லிம்களுடைய ஒரு திருக்குர்ஆன் விரிவுரையாளரே இதனை ஒப்புக் கொள்கின்றார். கொள்கை வேறுபாடு இருந்தபோதிலும், அதில் தம்மை அவர் உண்மையாளர் என்று கருதியிருந்தபோதிலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஆற்றிய திருக்குர்ஆன் தொண்டையும், இஸ்லாமியத் தொண்டுகளையும் அவரால் புகழாமல் இருக்க முடியவில்லை.

வெளிப்புற மற்றும் உட்புற ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார் என்று அல்லாஹ் வாக்குறுதி வழங்கியிருக்கும்போது அன்னாரது காலத்தில் அன்னாரைப் போன்ற அறிவு மற்றும் ஞானத்தை வேறு எவரால் எடுத்துக் காட்ட முடியும். இன்னும் கூறுவதாயின் பிற்காலத்தில் வருபவர்களும் கூட அன்னாரது ஞானத்தில் இருந்துதான் பயன் பெறுவார்கள். அப்பொழுதுதான் அவர்களால் உண்மையான வழிகளில் சென்று கொண்டிருக்க முடியும்.

டாக்டர் அல்லாமா முஹம்மது இக்பால் ஸாஹிப் அவர்கள் தொடர்பாக பேசப்படும்போது, ஜமாஅத்திற்கு எதிராக பல விஷயங்கள் பேசப்படுகின்றன. ஆனால், அன்னாருடைய இந்த விஷயங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1927ம் ஆண்டு மார்ச் 24-ம் தேதி லாஹூரில் ஒரு மாநாடு நடைபெற்றது. அல்லாமா இக்பால் ஸாஹிப் அவர்கள் அதற்கு தலைமை வகித்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அங்கு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதன் பிறகு அல்லாமா இக்பால் ஸாஹிப் இவ்வாறு கூறினார்கள்: ஞானங்களால் நிறைந்த இவ்வாறான சொற்பொழிவு வெகு காலத்திற்கு பிறகு லாஹூரில் கேட்கக் கிடைக்கின்றது. குறிப்பாக திருக்குர்ஆனின் வசனங்களுக்கு மிர்ஸா ஸாஹிப் அவர்கள் மிகவும் சிறப்பான விளக்கங்களை வழங்கினார்கள். அந்த சொற்பொழிவில் எனக்கு கிடைத்த இன்பம் வீணாகி விடக் கூடாது என்பதற்காக நான் எனது சொற்பொழிவை நீண்டதாக ஆக்க விரும்பவில்லை.

ஸய்யித் அப்துல் காதிர் ஸாஹிப் எம். ஏ அவர்கள் வரலாற்றுத் துறையில் பேராசிரியராக இருந்தார்கள். லாஹூருடைய இஸ்லாமியக் கல்லூரியின் முதல்வராகவும் இருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: 1919-ம் ஆண்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இஸ்லாத்தில் தோன்றிய கருத்து வேறுபாடுகளின் ஆரம்பம் என்ற தலைப்பில் லாஹூரில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கருத்துச் செறிவு நிறைந்த சொற்பொழிவாக அது இருந்தது. அந்த சபையில் இவர்கள் தலைமை வகித்துக் கொண்டிருந்தார்கள். தமது தலைமை உரையில்ஸய்யிது அப்துல் காதிர் ஸாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அறிவாளியான தந்தைக்குப் பிறந்த அறிவாளியான மகன். இந்த சொற்பொழிவு மிகவும் ஞானமிக்கதாக இருந்தது என்பதற்கு மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களின் பெயரே போதுமான உத்திரவாதம் ஆகும். இஸ்லாமிய வரலாறு குறித்து எனக்கும் மேலோட்டமான அறிவே இருக்கின்றது. முஸ்லிமாக இருந்தாலும், முஸ்லிம் அல்லாத வரலாற்று ஆசிரியராக இருந்தாலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் தோன்றிய கருத்து வேறுபாடுகளின் ஆழம் வரை சென்று புரியக் கூடிய மக்கள் வெகு சிலரே. அழிவை ஏற்படுத்திய உட்பூசல் நிறைந்த இந்த குழப்பமான போரின் அம்சங்களை புரிவதில் மிகக் குறைவானவர்கள்தான் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். ஆனால், அன்னார் இந்த உட்பூசல் நிறைந்த குழப்பங்களின் விஷயங்களை புரிவதில் வெற்றி பெற்றது மட்டுமின்றி மிகவும் தெளிவாகவும், தொடர்ச்சியாகவும் அன்னார் எடுத்துரைத்துள்ளார்கள். அவற்றின் காரணமாக கிலாஃபத் நீண்ட காலம் வரை தடுமாற்றத்தில் இருந்து வந்தது. என்னைப் பொறுத்த வரை இஸ்லாமிய வரலாற்றில் ஆர்வம் கொண்டுள்ள மக்களின் பார்வைக்கு இவ்வாறான சான்று மிகுந்த கட்டுரை இதற்கு முன்னால் வந்திருக்க முடியாது.

எட்வின் சாமூவேல் ஒட்டகோ அவர்கள் இந்தியாவினுடைய அனைத்து விவகாரங்களிலும் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் செகரட்டரி ஆஃப் ஸ்டேட்ஸ் ஃபார் இந்தியாவாக இருந்துள்ளார்கள். இந்தியா, பாகிஸ்தான் அல்லது இந்திய துணைக் கண்டம் பிரிட்டனுக்கு கீழ் இருந்தபோது இவர்கள் பிரிட்டன் பார்லிமெண்டுடைய செகரட்டரி ஆஃப் ஸ்டேட்ஸ் ஆக இருந்தார்கள். 1917-1918ல் அன்னார் இந்த பொறுப்பில் இருந்தார்கள். அந்த நாட்களில் இந்தியாவின் நிலையை கண்டறிவதற்காக இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார்கள். அந்த சமயத்தில் இந்தியாவின் விஷயங்களை தீர்த்து வைப்பதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் அவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கினார்கள். அப்போது எட்வின் சாமூவேல் அவர்கள் இந்தியாவின் முதன்மைச் செயலாளராகவும் இருந்தார்கள். ஒரு சொற்பொழிவின் வடிவில் அது அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த சொற்பொழிவு லாஹூரில் அவர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட்டது. ஹஸ்ரத் ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் அதைப் படித்துக் காட்டினார்கள். ஹுஸூர் (ரலி) அவர்களும் அவரை நேரில் சந்தித்தார்கள். மேலும் அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள். எட்வின் சாமூவேல் ஒட்டகோ ஸாஹிப் அவர்கள் இந்த சந்திப்பு மற்றும் வழிகாட்டல்களைக் குறித்து தமது டைரியில் குறிப்பு எழுதியுள்ளார்கள். அது அவர்களின் மரணத்திற்குப் பிறகு AN INDIAN DIARY என்ற பெயரில் வெளியாகி இருக்கின்றது. இந்தக் குறிப்பை அவர்கள் 1917 நவம்பர் 17-ம் தேதி எழுதியிருக்கின்றார்கள். அதில் இவ்வாறு வருகின்றது: நான்காவது குழுவாக வந்தவர்கள் அஹ்மதிகள் ஆவர். இவர்கள் முஸ்லிம்களுடைய ஒரு பிரிவினர் ஆவர். இவர்கள் மனித குல ஒற்றுமையில் நம்பிக்கை வைப்பவர்களாக இருக்கின்றனர். மேலும் அனைத்து நபிமார்களின் மீதும் நம்பிக்கை வைக்கக் கூடியவர்கள். அவர்கள் ஒரு நீண்ட ஆலோசனையை படித்துக் காட்டினார்கள். அதனை அவர்களுடைய தலைவர் எழுதியிருந்தார்கள். நமக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட்ட மற்ற ஆலோசனைகளைக் காட்டிலும் இது எவ்வளவோ மேலானதாக இருந்தன. எக்ஸிகியூட்டிவ் கவுன்சிலுடைய உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பாகவும், சட்டம் இயற்றுவது தொடர்பாகவும் இருந்தது. அனைத்து குழுவிலிருந்து வந்த ஆலோசனைகளைக் காட்டிலும் இந்த ஆலாசனைகள் சிறந்தாகவும், மிகவும் நன்கு சிந்தித்து அறிவூப்பூர்வமாக ஆயத்தம் செய்யப்பட்டவையாகவும் இருந்தன. இறுதியாக அந்தக் குறிப்பில் இவ்வாறான வாசகம் இடம் பெற்றிருந்தது: He has a Good mind And had carefully thought out his consitutional schemes. அதாவது அவர் நல்ல அறிவு படைத்த மனிதராக இருந்தார்; மேலும் மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும், ஆழமான கண்ணோட்டத்துடனும் தமது அரசியலமைப்புத் திட்டத்தை கவனமாக சிந்தித்தவர் ஆவார். இவர் நன்கு படித்த தன்மையுள்ள அரசியல்வாதியாக இருக்கின்றார் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

அதாவது உலகக் கல்வி கற்காத ஒருவரைப் பற்றி அவர் இவ்வாறு கூறினார். அவர் உட்புறமான மற்றும் வெளிப்புறமான ஞானங்களால் நிரப்பப்படுவார் என்று அல்லாஹ் முன்னறிவிப்பு செய்திருக்கும்போது இது சாத்தியமானதாக இருக்காதா என்ன?

ஹைகோர்டுடைய அட்வகேட் சவ்த்ரி முஹம்மது அக்பர் கான் ஸாஹிப் பட்டி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இங்கு ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுவது பொருத்தமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஃபாரிஸ் என்ற ஒரு பத்திரிகையின் ஆசிரியர் லாலா கரம்சந்த் அவர்கள் பத்திரிகைத் துறையில் எழுதக் கூடிய ஒரு குழுவுடன் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அங்கிருந்து திரும்பி வந்த பிறகு மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடைய தலைமைத்துவம், அகப்பார்வை, ஆளுமை ஆகியவற்றைக் குறித்து பல கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதினார்கள். அப்பொழுது எதிரிகளுக்கு மத்தியில் கடும் பதற்றம் தொற்றிக் கொண்டது. அவர்கள் என்னிடம் இது குறித்து கூறினார்கள்; நாமோ ஸர் ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களை மாபெரும் மனிதராக கருதிக் கொண்டிருக்கின்றோம்.

ஸர் ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் அந்நாட்களில் இந்திய தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாமோ ஸர் ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களை மாபெரும் மனிதராக கருதிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களுக்கு முன்னால் ஸர் ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களின் ஆளுமை பள்ளிச் சிறுவனின் நிலையைப் போன்று உள்ளது. மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் எல்லா விவகாரங்களிலும் ஸர் ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களை விட சிறந்த கருத்துகளை கொண்டவராகவும், மிகச் சிறந்த சான்றுகளை எடுத்து வைப்பவராகவும் இருக்கின்றார்கள். அவர்களிடத்தில் எல்லையற்ற நிர்வாகத் திறமைகள் இருக்கின்றன. இவ்வாறான நபர் எந்தவோர் ஆட்சியையும் எளிதாக உச்சத்திற்கு கொண்டு செல்ல முடியும்.

இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் சட்டக் கல்லூரியில் நாட்டின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளைக் குறித்து சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். அந்த சொற்பொழிவுகளில் அன்னார் பல்கலைகழகத்தில் தேர்ச்சிப் பெற்ற சொற்பொழிவாளர்களைப் போன்று

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

வரைபடங்களின் மூலமாகவும், கரும்பலகை மூலமாகவும் சில நுட்பமான கருத்துகளை விவரித்தார்கள். எனக்கு ஒரு நுட்பமான கருத்து நினைவில் உள்ளது.

இதனை எழுதக் கூடியவர் இதைக் கூறுகின்றார்: எனக்கு ஒரு நுட்பமான கருத்து நினைவுக்கு வருகின்றது. அன்னார் சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: பரிதாபம் என்னவென்றால், நாடு பிரிக்கப்படும்போது கடலோரத்தில் இருக்கக் கூடிய தீவுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. அதில் லகாத் தீவு, ஃபரன் தீவு, பாலாத் தீவு ஆகியவை. அந்தக் கடலோரத் தீவுகளில் வசிக்கும் மக்கள் எண்ணிக்கையில் பெரும்பாலார் முஸ்லிம்கள் ஆவர். அவர்களின் முக்கியத்துவம் பாதுகாப்புக் கண்ணோட்டத்தை விட எவ்வளவோ அதிகம் ஆகும். இந்த வழிகாட்டலைக் கேட்டுக் கொண்டிருந்த மக்களிடம் பொதுவாக உருவாகிய தாக்கம் என்னவென்றால் நாடு பிரிக்கப்பட்டபோது மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களிடம் வழிகாட்டல் பெற்றிருக்கலாமே என்று அவர்கள் எண்ணினர். வீணான மார்க்கத் துவேஷம் மற்றும் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளுதல் ஆகிய காரணங்களால் அன்னாரிடமிருந்து இந்த சமுதாயம் பலன் பெறுவதை வீணடித்து விட்டது. மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட திறமைகளிலிருந்து பயன்பெற முடியாமல் இந்த சமுதாயம் ஆகிவிட்டது.

அந்த மக்களுக்கு அனைத்து சிறப்புகளும் இருந்தபோதிலும் இந்த அசாதாரணமான விவகாரத்தைக் குறித்து கொஞ்சம் கூட புரிதல் இல்லை என்பதை ஒரு நீதிபதி தனிப்பட்ட முறையில் ஒப்புக் கொண்டார். மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் ஸாஹிப் அவர்களின் விளக்கத்தை கேட்ட பிறகு அவர்களுடைய பிரபஞ்சம் ஒளிப்பெற்றது.முதல் முறையாக இஸ்லாமியக் கண்ணோட்டத்தைக் குறித்து சரியான அறிவு அவர்களுக்கு கிடைத்தது.

ஆகவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தான் பாகிஸ்தான் நிலைபெறுவதற்கு உயர்ந்த கருத்துகளை முன்னரும் எடுத்துரைத்தார்கள்; பின்னரும் எடுத்துரைத்தார்கள். படிப்பு அறிவு கொண்ட மக்களின் சிந்தனைகளை ஒளிரச் செய்து விட்டார்கள். அம்மக்கள் தன்னிலை மறந்து இருந்தார்கள். பள்ளிக் குழந்தைகளைப் போன்று எங்களுக்கு இந்த விஷயங்கள் எல்லாம் தெரியாமல் இருந்தது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் டமாஸ்கஸில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அல்இம்ரான் என்ற பத்திரிகை டமாஸ்கஸில் மஹ்தி என்ற தலைப்பில் 1924-ம் ஆகஸ்ட் 10-ம் தேதி செய்தி வெளியிட்டது. அதில் இவ்வாறு வருகின்றது: அன்னார் தலைநகருக்கு வருகை தந்த செய்தி தற்போது வெளியானது. இந்தியாவைச் சேர்ந்த பல ஆலிம்களும் தேர்ச்சி பெற்ற பல அறிஞர்களும் அன்னாருடன் கலந்துரையாடல் செய்வதற்காகவும், அன்னாருடைய வாதங்களைக் குறித்து அன்னாருடன் விவாதம் செய்வதற்காகவும் வந்தடைந்து விட்டார்கள்.

பிறகு என்னவாயிற்று என்றால், எழுதுபவர் கூறுகின்றார்: அவர்கள் அனைவரும் அன்னாரை மிகவும் ஆழமான ஆய்வு கொண்டவராகவும், அறிஞராகவும், அனைத்து மார்க்கங்களைக் குறித்தும் அவற்றின் வரலாறு மற்றும் தத்துவங்களைக் குறித்த ஆழமான அறிவு கொண்டவராகவும் இறை ஷரீஅத்துடைய தத்துவங்கள் நுட்பங்கள் ஆகியவற்றை அறிந்த ஆளுமையாகவும் அன்னாரைக் கண்டார்கள்.

இது ஓர் அரேபிய செய்தித் தாளின் சாட்சியாகும்.

அடுத்து, இஸ்ரேல் உருவாகும்போது செயல் திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருந்தன. உருவாகிய பிறகும் செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன. மார்க்க ரீதியிலான வரலாற்றுக் கண்ணோட்டத்தில் முஸ்லிம்களின் உரிமைகளை எடுத்துக் கூறி அவர்களை எச்சரிக்கை செய்ய அன்னார் முயற்சி செய்தார்கள். பிறகும் கூட அன்னார் அந்தப் பணியை தொடர்ந்தார்கள். இது தொடர்பாக அன்னார் அல்குஃப்ர் மில்லத்துன் வாஹிதா என்ற ஒரு கட்டுரையை எழுதினார்கள். பிறகு அந்தக் கட்டுரை அரபு நாடுகள் வரை கொண்டு சேர்க்கப்பட்டது. அரபியில் மொழியாக்கம் செய்யப்பட்டு முஸ்லிம் உலகிற்கு கொண்டு செல்லப்பட்டது. இப்பொழுதாவது நீங்கள் எச்சரிக்கை ஆகிவிடுங்கள் என்று அதில் அன்னார் கூறியிருந்தார்கள். அந்தக் கட்டுரையை பல அரேபிய பத்திரிகைகள் எடுத்துக் கூறி பாராட்டின. அதில் அன்னார் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த தமது கருத்துகளை எடுத்து வைத்து எச்சரிக்கையும் வழங்கியிருந்தார்கள். எவ்வாறான விளைவுகள் வெளிப்படும் என்று அன்னார் தம் கருத்தை வெளிப்படுத்தி இருந்தார்களோ இன்று போரில் அந்த விளைவுகளைத் தாம் காண நேரிடுகின்றது. அந்தோ பரிதாபம்! முஸ்லிம்கள் இப்பொழுதாவது கவனம் செலுத்த வேண்டுமே!

இது தொடர்பாக அஷ்ஷூரா பக்தாத் என்ற ஒரு செய்தித் தாளில் 1948 ஜூன் 18ம் தேதி பிரதியில் அதன் விவரம் வெளியானது. அதேபோன்று அல்அக்பாருல் டமாஸ்கஸ் என்ற செய்தித்தாளிலும் செய்தி வெளியானது. அதுவும் இந்தக் கட்டுரையை மிகவும் பாராட்டி எழுதியிருந்தது. இது எவ்வாறான கட்டுரை என்றால் இதனை அஹ்மதிகளும் படிக்க வேண்டும். படிப்பதால் பல விஷயங்களை புரிந்து அறிவு அதிகமாகின்றது.

ஸர்தார் ஷவ்கத் ஹயாத் கான் ஸாஹிப் என்பவர் ஜித் வ ஜிஹாத் ஆஸாதியே ஹிந்த் என்ற அமைப்பின் தலைவராக இருந்தார்கள். அவர்கள் The Nation that Lost its soul அதாவது ஆன்மாவை இழந்த சமுதாயம் என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஒருமுறை முஹம்மது அலி ஜின்னா ஸாஹிப் சார்பாக எனக்கு ஒரு தூதுச் செய்தி வந்தது. அந்த செய்தியில் கூறப்பட்டிருந்த விஷயம் என்னவென்றால், ஷவ்காத் ஸாஹிப் நீங்கள் பட்டாலா செல்கின்றீர்கள் என்று நான் அறிகின்றேன். அது காதியானிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ளது. நீங்கள் அங்கிருந்து காதியான் செல்லுங்கள்; பாகிஸ்தானைப் பெறுவதற்காக தமது நல்ல துஆக்களைக் கொண்டும், ஆதரவைக் கொண்டும் உதவி செய்யுமாறு ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களிடம் எனது விண்ணப்பத்தை எட்ட வையுங்கள் என்று அதில் கூறப்பட்டிருந்தது. ஷவ்கத் ஸாஹிப் கூறுகின்றார்கள்: மாநாடு நிறைவடைந்ததற்கு பிறகு நள்ளிரவு 12 மணியளவில் நான் காதியான் சென்றடைந்தேன். ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். முஹம்மத் அலி ஜின்னா ஸாஹிப் அவர்களின் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு நான் ஆஜராகியுள்ளேன் என்று நான் அன்னார் வரை தகவலை எட்ட வைத்துவிட்டேன். அன்னார் அப்பொழுதே கீழே இறங்கி வந்து விட்டார்கள். முஹம்மது அலி ஜின்னா ஸாஹிப் அவர்களின் கோரிக்கை என்ன? என்று கேட்டார்கள். அதற்கு, அவர்கள் தங்களுடைய துஆ மற்றும் ஆதரவை வேண்டுகின்றார்கள் என்று நான் கூறினேன். ஆரம்பம் முதலே தாம் அவர்களுடைய மிஷனிற்காக துஆ செய்து வருகின்றேன் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அவருக்கு பதிலளிக்கும் விதமாக கூறினார்கள். தம்மை பின்பற்றக் கூடிய மக்களை பொறுத்த வரை அதாவது அஹ்மதிகளைப் பொறுத்தவரை எந்தவொரு அஹ்மதியும் முஸ்லிம் லீக்கிற்கு எதிராக நிற்க மாட்டார்; யாராவது ஒருவர் துரோகம் செய்தால் அவர் ஜமாஅத்தின் ஆதரவிலிருந்து புறந்தள்ளப்படுவார் என்று கூறினார்கள். அதாவது எதிராக நின்றால் அவருக்கு ஜமாஅத் ஆதரவளிக்காது; அவர் அஹ்மதியாக இருந்தாலும் சரியே! முஸ்லிம் லீக்கின் வேட்பாளருக்கு நாங்கள் எவ்வாறிருப்பினும் ஆதரவு அளிப்போம் என்று கூறிவிட்டார்கள். இந்த சந்திப்பின் விளைவால் மும்தாஸ் தவ்லத் தானா ஸாஹிப் என்பவர் ஸியால்கோட் என்ற பகுதியில் நவாப் முஹம்மது தீன் என்ற ஓர் அஹ்மதியை பெரும் ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியடையச் செய்து விட்டார்.

ஷவ்கத் ஹயாத் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: காதியான் மக்கள் தமது அமீருடைய கட்டளையை செயல்படுத்தியவாறு முஹம்மது தீனுக்கு பதிலாக மும்தாஸ் கான் அவர்களுக்கு வாக்களித்தனர்.

இந்த மும்தாஸ் தவ்லத் கான் ஸாஹிப் என்பவர் யாரென்றால், இவர் தம் ஆட்சியில் 1963-ம் ஆண்டில் அஹ்மதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தவர் இவரே ஆவார். அஹ்மதிகள் அந்த மக்களுக்கு எந்த அளவு ஆதரவு கொடுத்தாலும் இவர்கள் அஹ்மதிகளுக்கு துன்பம் கொடுப்பதிலிருந்து விலகியிருப்பதில்லை. ஷவ்கத் ஸாஹிப் அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்: நான் பட்டான்கோட் சென்றடைந்தபோது மவ்லானா மவ்தூதி ஸாஹிப் அவர்களையும் சந்தித்து வரும்படி முஹம்மது அலி ஜின்னா ஸாஹிப் அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். அவர் சவ்த்ரி ரியாஸுடைய கிராமத்தை ஒட்டியிருக்கின்ற கிராமத்தில் தங்கியிருந்தார். நான் அவரிடம் சென்று முஹம்மது அலி ஜின்னா ஸாஹிப் அவர்களின் தூதுச் செய்தியை எட்டவைத்தவாறு பாகிஸ்தானிற்காக துஆ செய்யுங்கள்; அதற்கு ஆதரவளியுங்கள் என்று கூறியபோது, பாகிஸ்தானோ தூய்மையற்ற இடமாயிற்றே ; தூய்மையற்ற இடத்திற்காக எவ்வாறு துஆ செய்வது? என்று கேட்டார். இந்தியாவில் இருக்கக் கூடிய ஒவ்வொரு நபரும் முஸ்லிம் ஆகிவிடாத வரை பாகிஸ்தான் எவ்வாறு உருவாக முடியும்? என்றும் அவர் கேட்டார். அதாவது ஜமாஅத்தே இஸ்லாமி என்ற அமைப்பின் தலைவருடைய தொலைநோக்குப் பார்வையை கருத்தில் கொண்டு பார்க்கும்போது தற்போது வரை பாகிஸ்தான் உருவாகியிருக்க முடியாது. அதாவது அவரது கண்ணோட்டத்தின் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது இப்போது வரை பாகிஸ்தான் உருவாகியிருக்கக் கூடாது.

ஷவ்கத் ஹயாத் ஸாஹிப் அவர்கள் எழுதும் போது ஜமாஅத்தே இஸ்லாமி என்ற அமைப்பின் தலைவருடைய தொலை நோக்குப் பார்வை மற்றும் கண்ணோட்டம் எவ்வாறானதாக இருந்தது? என்பதை எழுதுகின்றார். ஆனால், மற்றொரு புறம் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் கண்ணோட்டம் எவ்வாறானது? என்று பாருங்கள்! இன்று இந்த வரலாற்றை அறியாத அரசியல்வாதிகள் மற்றும் பெயர் தாங்கி ஆலிம்களின் பார்வையில் அஹ்மதிகள் நாட்டின் எதிரிகளாக இருக்கின்றனர். அஹ்மதிகள் இந்த நாட்டிற்காக எல்லா தியாகங்களையும் செய்தார்கள். இந்த நாடு உருவான நேரத்திலும் தியாகம் செய்தனர். இன்றும் செய்கின்றனர். ஆனால், இந்த நாடு உருவாகுவதற்கு எதிராக இருந்த மக்கள் இப்பொழுது நாட்டின் குத்தகைக்காரர்களாக ஆகிவிட்டனர். அல்லாஹ் இந்த அநீதியாளர்களிடமிருந்து விரைவில் இந்த நாட்டிற்கு இரட்சிப்பை வழங்குவானாக.

அடுத்து முஸ்லிம்கள் மீது வேதனை கொண்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் செய்த மற்றொரு சாதனையைக் குறித்து கூறுகின்றேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1923-ம் ஆண்டில் ஷுத்தி எனும் இயக்கத்திற்கு எதிராக

#12 KNG Garden
sundakamuthur main Road,
Kuniyamuthur,
Coimbatore-641008
93632 27227
succesraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
936322729

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 04 - 11 APR 2024 Issue No.14 & 15

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

போராட்டத்தை அறிவித்தார்கள். ஷூத்தி இயக்கம் என்பது (முஸ்லிம்களை) இந்துக்களாக மாற்றும் திட்டமாகும். ஷரத்தாநத் என்ற பெயருடைய ஓர் இந்துத் தலைவர் எந்த முஸ்லிம்களுடைய மூதாதையர்கள் இந்தியாவில் இந்துக்களாக இருந்தார்களோ அவர்களை மீண்டும் இந்துக்களாக ஆக்க வேண்டும் என்பதற்காக ஓர் இயக்கத்தை ஆரம்பித்து இருந்தார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொடர்ச்சியாக முபல்லிஃக்மார்களின் பல குழுக்களை மல்கானா என்ற பகுதிக்கு அனுப்பி வைத்து வந்தார்கள். இது தொடர்பாக கோரக்பூர் என்ற இடத்திலிருந்து வெளியாகிய மஷ்ரிக் என்ற செய்தித் தாளில் 1923 மார்ச் 29-ம் தேதியன்று இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமும் தலைவருமான அன்னார் தொடர்ச்சியான சொற்பொழிவுகள் மற்றம் எழுத்துகளின் தாக்கத்தினால் தம்மைப் பின்பற்றக் கூடிய மக்களிடத்தில் பெரும் தாக்கத்தை உருவாக்கி விட்டார்கள். இப்பொழுது இந்தப் போராட்டத்தில் அனைவரையும் விட இந்தப் பிரிவுதான் முன்னணி வகிக்கின்றது. அஹ்மதிய்யா பிரிவைப் பொறுத்த வரை இந்த புதிய முஸ்லிம் பிரிவிற்கு ஆதரவளிக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஏனெனில், இந்தப் பிரிவுடன் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. ஆனால், இஸ்லாத்தினுடைய பெயர் இணைந்திருப்பதினால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களுக்கு மார்க்கத் தன்மானம் பிறந்தது. அன்னாருடைய சில சொற்பொழிவைக் கேட்கும்போது, இப்பொழுதும் கூட இறைவனின் பெயரில் உயிரைக் கொடுப்பதற்கு மக்கள் ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்பதைக் கண்டு உள்ளத்தில் நடுக்கம் ஏற்பட்டு விடுகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் தமது கொள்கைகளை போதிக்கும் என்ற அச்சம் நமது ஆலிம்களுக்கு இருக்குமென்றால் அவர்கள் ஒற்றுமையுடன் தம் ஜமாஅத்தில் களங்கமற்றத் தன்மையை உருவாக்கி அதில் முன்னேறச் செய்ய வேண்டும். அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத் தமது கொள்கைகளை பரப்பி விடும் என்ற அச்சம் மற்ற முஸ்லிம்களுக்கு இருக்குமென்றால் பின்னர் மற்ற முஸ்லிம்கள் ஒன்றிணைந்து ஏகமனதாக ஒரு குழுவை உருவாக்குங்கள்; களங்கமற்றத் தன்மையை உருவாக்கி முன்னேறுங்கள். எவ்வாறு அஹ்மதிகள் போட்டி போடுகின்றார்களோ, இஸ்லாத்தை காப்பாற்றுகின்றார்களோ அவ்வாறு நீங்களும் காப்பாற்றுங்கள். அஹ்மதிகளாக ஆக்குவதற்காக அங்கு செல்பவர்களுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. சமைக்கப்பட்ட உணவுகள் கூட கிடைப்பதில்லை. கடலைகளை உண்கின்றனர்; சத்து எனும் ஒருவகை மாவை உண்கின்றனர்; அஹ்மதிகளிடத்தில் இந்த களங்கமற்றத் தன்மையை நாம் பரவலாக காண்கின்றோம். அவர் கூறுகின்றார்: அஹ்மதிகளிடத்தில் இந்த களங்கமற்றத் தன்மையை நாம் பரவலாக காண்கின்றோம். நேர்மை, வாக்குறுதியை பேணுதல் மற்றும் தமது இமாமிற்கு கட்டுப்படுதல் ஆகியவை இந்த ஜமாஅத்தினுடைய தனிச் சிறப்பாகும். மிர்ஸா ஸாஹிப் மற்றும் அன்னாரது ஜமாஅத் உயரிய துணிவைக் கொண்டதாகவும், தியாகங்கள் செய்யக் கூடியதாகவும் இருக்கின்றது. மற்ற முஸ்லிம்களுக்கு தியாகம் மற்றும் தன்மானத்தை தூண்டக் கூடியதாக அது இருக்கின்றது. அவர்கள் ஒற்றுமையுடன் இருக்கின்றார்கள்; மேலும் நீங்களும் ஒன்று சேருங்கள் ; இவ்வாறு தியாகங்களை உருவாக்குங்கள் என்று முஸ்லிம்களுக்கு தன்மானத்தை ஊட்டுகின்றனர். நேர்மை மற்றும் அமானிதத்தைப் பேணுதல் போன்றவை முஸ்லிம்களுடைய தனிச் சிறப்பாகும். அது தற்போது அஹ்மதிகளிடத்தில் தெளிவாகக் கிடைக்கின்றது. அஹ்மதிகளுடைய நன்மைகள் தியாகங்கள் மற்றும் அவர்களுடைய நேர்மை போன்றவை அனைத்தையும் விட புகழத்தக்கதாக இருக்கின்றது. இதன் காரணமாக வருவாய் குறைவாக இருந்தபோதிலும் இந்த மக்கள் பெரும் பெரும் பணிகளை செய்கின்றனர்.

இந்த விஷயங்களை அந்நியர்களும் ஒப்புக் கொள்கின்றனர். இந்த வேதனை அன்னாருடைய உள்ளத்தில் இருந்தது. அதன் காரணமாக ஜமாஅத்தில் ஒரு சிறப்பான துடிப்பை அன்னார் உருவாக்கி முழு ஜமாஅத்தையுமே ஏதாவது ஒரு வகையில் இந்த வேலையில் ஈடுபடுத்தி விட்டார்கள். இதனை அந்நியர்களும் கூட ஒப்புக் கொள்கின்றார்.

பீம்சிங் ஸாஹிப் என்ற பிரபல்யமான பத்திரிகையாளர் ஒருவர் இருந்தார். அவர் அரசியல்வாதியும் ஆவார். பத்திரிகைத் துறையில் அவருடைய பெயர் பீம்ஷீங் என்பதாகும். மியான் முஹம்மது ஷஃபீ என்பது அவருடைய உண்மையான பெயராகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மரணத்தின்போது லாஹூருடைய டைரியில் இவ்வாறு எழுதினார்: மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் 1914-ம் ஆண்டில் கிலாஃபத்தின் சிம்மாசனத்தில் அமர்ந்த பிறகு அன்னார் எவ்வாறு தமது ஜமாஅத்தை கட்டுக்கோப்புடன் நடத்தினார்கள் என்றால் மேலும் எவ்வாறு ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவை நீண்டகாலம் பணியாற்றக் கூடிய உயிரோட்டமான அமைப்பாக ஆக்கினார்கள் என்றால் அதன் மூலமாக அன்னாரின் அளவற்றத் நிர்வாகத் திறன்களைப் பற்றி புரிய முடிகிறது. அன்னாரிடத்தில் எந்தவொரு பல்கலைகழகத்தின் பட்டமும் இல்லையென்றாலும் அன்னார் தனிப்பட்ட ரீதியில் கற்றறிந்து அல்லாமா என்றழைக்கப்படுவதற்கு தகுதியானவராக தம்மைத் தாமே ஆக்கிக் கொண்டார்கள். அன்னார் ஒருமுறை ஒரு பேட்டியில் என்னிடத்தில் கூறியது என்னவென்றால், நான் ஆங்கிலத் திறமையை வளர்த்துக் கொள்வதற்காக சிவில் அன்ட் மிலிட்டரி கெஸட்டின் இதழ்களை தொடர்ச்சியாக படித்து வந்தேன் என்று கூறினார்கள். இந்தப் பத்திரிகை காஜா நஸீர் அவர்களுடைய காலத்தில் அது நின்று விடாதவரை அதனை தொடர்ச்சியாக படித்து வந்துள்ளார்கள். மிர்ஸா ஸாஹிப் அவர்கள் ஒரு பண்பட்ட சொற்பொழிவாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்து வந்தார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்தையும் தாமதிக்காமல் பயன்படுத்திக் கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். அதன் மூலமாக ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான பாதைகள் திறந்து கொண்டே சென்றன.

ஜமாஅத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அன்னாருடைய மிகப் பெரிய சாதனை என்னவென்றால், இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காதியான் அன்னாரிடம் இருந்து பறிக்கப்பட்டபோது அன்னார் ரப்வாவை இரண்டாவது தலைமையகமாக உருவாக்கினார்கள்.


லாஹூர் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களின் மொழியாக்கப் பத்திரிகையான தி லைட்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மரணத்தைக் குறித்து எழுதும்போது, A Great Nation builder என்ற தலைப்பில் 1965 நவம்பர் 16-ம் தேதி இதழில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களின் வாழ்க்கை அதிகமதிகமான சம்பவங்களை கொண்டதாக இருக்கின்றது. நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய எண்ணற்ற மகத்துவ மிக்க சாதனைகளாலும், திட்டங்களாலும் அது நிறைந்து இருந்தது.அது தற்போது அன்னாரின் மரணத்தால் முற்றுப் பெற்றுள்ளது. அறிவியல் ஞானங்களால் நிறைந்திருந்த ஒரு தன்னிகரற்ற ஆளுமையாக அன்னார் இருந்தார்கள். கடந்த அரை நூற்றாண்டில் மார்க்க அறிவு முதல் இஸ்லாமியப் பிரச்சாரம் வரையிலும் அதேபோன்று அரசியல் அமைப்பு போன்ற பல்வேறு தளங்களிலும் மர்ஹூம் அவர்கள் தமது தலைமைத்துவம்,செயல்பாடுகள், சிந்தனைகள் போன்ற தமது தனித்துவமான தாக்கத்தின் ஆழமான வடுக்களை விட்டுச் சென்றுள்ளார்கள். உலகம் முழுவதும் விரித்து வைக்கப்பட்டுள்ள இஸ்லாமிய வலையாக இருக்கட்டும்; நாலாப் புறமும் கட்டப்பட்டு வருகின்ற பள்ளிவாசல்களின் பணிகளாக இருக்கட்டும்; ஆஃப்ரிக்கா போன்ற பரந்த பழைய நாடுகளில் நீண்ட காலமாக நிலைபெற்றுள்ள கிறிஸ்தவ மிஷன்களை வேரோடு பிடுங்கி எறியக் கூடிய இஸ்லாத்தின் தப்லீஃக் பணியாக இருக்கட்டும்; இவை மர்ஹூம் அவர்களின் தெளிவான சாதனைகளாகும். மர்ஹூம் அவர்கள் தெளிவான செயல்திட்டங்களை உருவாக்குதல், அன்னாரின் நிர்வாகத் திறன்கள், களைப்படையாத அன்னாரின் தொடர் முயற்சிகள் போன்றவை ஒரு நிலையான நினைவுகளை

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்...

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad